இந்திய நாட்டில் 'நவீன ஜார்கள்!'

திராவிடநாடு

மலர் 9 | 7—1—51 | இதழ் 29

இலங்கை 15 சதம்] [விலை அணா 2

மாவட்ட வீரரே—மகத்தான சந்தர்ப்பம்!

டில்லி மந்திரி மஹ்ராப் சென்னையிலிருந்து கிளம்பி வெளி மாவட்டங்களில் செல்ல வகுத்திருக்கும் சுற்றுப் பயணத் திட்டம், இது.

ஜன 9

கோவை விமான மூலம் காலை 10-20க்கு சேர்வார்.

அன்று,

தென் இந்திய ஆலை முதலாளிகள் சங்கம்,
ஆலைத் தொழிலாளர் யூனியன்,
துணி வியாபாரிகள் சங்கம்,
விவசாயக் கல்லூரி — இன்ஜினியரிங் கல்லூரி.
பீளமேடு-பி. எஸ் ஜி இன்ஸ்டிடியூட்.

கோவையிலிருந்து கார் மூலம் திருச்சி வருவார்.

வரும் வழியில்,
பல்லடம்
காங்கேயம்
கரூர்
குளித்தலை
வழியாக,

ஜன 10

திருச்சி சேர்வார்.
ஸ்ரீரங்கம அரசியல் மாநாடு

ஜன 11. காலை திருச்சியிலிருந்து காரில் கிளம்பி,
மணப்பாறை
திண்டுக்கல்
சோழவந்தான்
வாடிப்பட்டி
வழியாக
மதுரை சேர்வார்.

அங்கு,
மதுரை மில்
மதுரைக் கல்லூரி
நகரசபை வரவேற்பு
பொதுக்கூட்டம்.

எங்கும் காட்டுங்கள்,
கருப்புக் கொடி!

இழிநிலை வளர்க்கும் 'பாரதமாதா'

நேர்மை மறந்த 'நீரோ'க்கள்

அடக்குமுறை நம் கால் தூசு!

ஆணவம் அழிந்தே தீரும்

ஆட்சியாளர் தர்பார்

இளம்வழுதி எதிர்முரசு

தோழர் இரே. இளம்வழுதி, எம்.ஏ., பி.எல். — நமது கழகத்தின் வீர இளைஞர்களின் முன்னேடும் வெற்றித் தூதர். மாணவப் பருவமுதல் அவர் ஆற்றிவரும் பணிகள் பல; அவர், நாகர்கோயில் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, வீர முழக்கமிட்டபோது, நமது இதயமெல்லாம் பூரித்தது; அவருடைய சங்கநாதத்தின் பகுதிகள்:—

நமது திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்து சுமார் ஒன்றரை ஆண்டுகள் தாம் ஆகின்றன. சொந்த வீட்டின் சொத்துக்களைத் துறந்து மறந்து, விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டுப் புதுக் குடித்தனம் ஆரம்பித்தவர்கள் நாம். ஆரம்பித்துக் கொஞ்ச காலம் தான் ஆனாலும் நாம் சாதித்தவை ஏராளம். பணபலம் கிடையாது பத்திரிகை பலமா அதுவும் கிடையாது—எந்த ஒரு அரசியல் கட்சியும் ஆரம்பக் காலத்திலேயே சாதிக்காத சாதிக்க முடியாத பல காரியங்களை நாம் சாதித்துக் காட்டியிருக்கிறோம் —இலட்சக் கணக்கான உறுப்பினர்கள்—600க்கு அதிகமான கிளைக் கழகங்கள்—தமிழக முழுவதிலும்—கேரள நாட்டிலும் ஆந்திர கன்னட பிரதேசங்களிலும் நமது குரல் கேட்கிறது என்ற அளவில் நமது தொண்டு மலர்ந்து வருகிறது. பத்துக்கு மேற்பட்ட மாநாடுகளை மிகப் பிரமாதமாக நடத்திக் காட்டியிருக்கிறோம் — மாணவரிடை திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தை அமைத்துத் தந்துள்ளோம்— இவ்வளவு செய்ததற்கும் நமது இலட்சியத்துக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள மக்களின் அன்பும் ஆதரவும், தொழிலாளிகளின் பக்க பலமும், மாணவரின் உற்சாகமுமே காரணமாகும்.

என்னதான் இத்தனை ஆதரவு மக்கள் மன்றத்திலே நமக்கு இருந்தாலும், ஆளும் கூட்டத்தின் 'கோயபல்சுகள்' மேடையில் மார் தட்டிப் பேசுகிறார்கள். இந்த நாட்டில் காங்கிரசுக்கு எதிர்க்கட்சியே கிடையாதென்று! எமது காங்கிரஸ் மகா சபையைப் பாரீர்! அது செய்யும் வீரச் செயல்களைக் காணீர்! என்று சண்டப் பிரசண்டம் செய்கின்றனர். அவர்களுடைய அற்ப சந்தோஷத்தில் நாம் தலையிட விரும்பவில்லை; அதற்கு நேரமுமில்லை. நாட்டில் காங்கிரஸ் பாசிச ஆட்சியின் கோலத்தால் எதிர்ப்புச் சக்திகள் திரண்டு வருகிற நேரமிது! திராவிட நாட்டைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகு பணியில் முன்னணியில் இருக்கிறது. நமது கழகம் வளர வளர, மக்களிடை ஆதரவு பெருகப் பெருக பதவி ருசியும் அதிகார போதையும் கண்ட ஆளவந்தார்கள் சீறிப் பாய்வார்கள். இதில் ஆச்சரியமோ அதிசயமோ நாம் கொள்ளத் தேவையில்லை.

மேடைப் பேச்சுகள், வெளியீடுகள், பத்திரிகைகள், நாடகங்கள் இவைகள் வாயிலாகப் பிரச்சாரம் செய்து வருகிறோம். நமது பிரச்சாரத்தால் இதுவரை சிறு கலகமோ, குழப்பமோ அமைதிக்குப் பங்கமோ ஏற்பட்டதாக அரசாங்கத்தால் நிரூபிக்க முடியுமா? ஜனநாயக சர்க்கார் எங்கள் சர்க்கார் என்று தம்பட்டமடிக்கும் அந்தத் தம்பிரான்கள் ஜனநாயகத்தையும் 'தேசியத்தனம்' செய்கிறார்கள். பண்டித நேரு பாராட்டிப் பேசும் அந்த ஜனநாயகத்தை, காந்தியார் அஹிம்சை வழியில் வளர்த்த ஜனநாயகத்தை, இந்தியா அரசியல் சட்டம் வானளாவ ஏட்டிலே புகழும் அந்த ஜனநாயகத்தைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு எதிர்கட்சியா? அதுவும் திராவிட முன்னேற்றக் கழகமா அதன் நாக்கை அறு! கையை முறி, காலை ஒடி என்ற கட்டளைகளைப் பிறப்பிக்க காருண்யமே உருவான இந்தக் கனம்கள் கனவிலும் தவறுவதில்லை. அவசரச் சட்டங்கள், அடிக்கொரு மாற்றம், திருத்தம், ஆள்பிடிச் சட்டம் அதற்கான எடுபிடி ஏவலர்கள்—வெள்ளைய அரசாங்கமே வெட்கப்படும்படியாக ஜார் தர்பார் நடத்தும் இந்த நவீன ஜார்கள், சியாங்கே ஷேக்கின் இந்திய பதிப்புகள்! எத்தனை நாளைக்குத் தான் அட்டகாசம் செய்ய முடியும்? அடக்குமுறை, நமது நாட்டில் எந்த அளவிற்கு விபரீதமாக வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்தால் நேர்மை தலை குனியும்; நீதி இந்த நீரோக்கள் பக்கம் திரும்பாது.

சகலமும் 'தடை'மயம்!

இராவண காவியம் தடை—இன்பத் திராவிடம் தடை—இலட்சிய வரலாறு தடை—இரணியன் நாடகம் தடை—சர்வாதிகாரி நாடகம் தடை—தூக்குமேடை நாடகம் தடை—ஆரியமாயை மீது வழக்கு—அதற்கு அபராதம் — சிறைத் தண்டனை—திராவிடநாடு பத்திரிகைக்கு ஜாமீன்—இந்த அக்ரமம், அநியாயம் போதாதென்று நினைத்த நேரமெல்லாம் 144—கழகக் கூட்டங்களுக்கு 144—பேச்சாளர்களுக்கு வாக்கறுப்புச் சட்டம்—இவ்வளவு அதிகார ஆணவமும், அதிகார மமதையும் எதிர்க் கட்சியை ஒழிக்கவேண்டுமென்பதற்குத்தான். ஆனால் அதே நேரத்தில் காங்கிரஸ் கூட்டங்கள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் நடைபெறலாம்; காங்கிரஸ் பிரச்சார பீரங்கிகள், யாரை என்ன வேண்டுமானாலும் சொல்லி, அறிவை அடகு வைத்துவிட்டு, நாக்கில் நரம்பின்றி 'கோயபல்ஸ்' வேலை செய்யலாம்; கழகக் கூட்டங்களில் கலவரம் செய்யலாம்; கூட்டத்தைக் கலைக்கலாம்; கழகப் பந்தல்களைக் கொளுத்தலாம்; கழகத்தின் அரும்பெரும் தலைவர்களை அரசியல் விரோதத்தினால் அற்பத்தனமாக ஆபாசமான நடையில் தூஷித்து எழுதலாம்—இதையெல்லாம் 'பாரதமாதா' தடுக்க மாட்டாள்!—நாம் பேசினாலோ குற்றம்—அவர்கள் அக்ரமமாக தூஷித்தாலும் அகற்று ஆலவட்டம்—நாம் எழுதினாலோ பறிமுதல்—அவர்கள் எதைக் கிறுக்கினாலும் அதற்கு வரவேற்பு—நாம் அருமையான நாடகங்களை எழுதினால் தடை—நடித்தால் கைது—அவர்கள் நாடகம் என்ற

(8-ம் பக்கம் பார்க்க)

சேலம் நெசவாளர் போராட்டம்

சேலம்: ஜனவரி 11-ம் தேதி முதல் மூன்று நாட்கள் பட்டினியால் வதைப்பட்டுக் கிடக்கும் நெசவாளரின் 'அறப்போர்' கலெக்டர் அலுவலகத்தின் முன் அமைதியான முறையில் நடைபெறும்.

மேற்படி தீர்மானம் 1—1—51 நடைபெற்ற கைத்தறி நெசவாளர் நடவடிக்கைக் கமிட்டியால் முடிவு செய்யப்பட்டது.

பதைக்கும்‘சென்னை’வதைக்கும்‘டெல்லி’!

காங்கிரஸ் ஆட்சி-‘கபோதி’களின் கூடாரம்!

கர்ஜனைகள் காற்ருேடு போயின!

சர்க்காரின் தான்தோன்றி தர்பார்

அடக்குமுறை—நம்மை அழிக்காது

இரத்தம் சிந்தினும், இலட்சியம் காப்போம்

நாஞ்சில் மாநாட்டுத் துவக்க உரை

இளங்கோவின் முரசொலி

தோழர் என். எஸ். இளங்கோ—வாலிப முறுக்கும், வைர நெஞ்சும் இலட்சிய வீரமும், எண்ணத் தெளிவும், கொண்ட செயல்வீரர். அவர், நாஞ்சில் மாநாட்டைத் துவக்கிவைத்த போது ‘புதுயுகத்தின் வாயிலிலே நிற்கும் புதுமுரசு’ போல இருந்தது. அந்த முரசு எழுப்பிய முழக்கத்தின் பகுதி, இது:—

நாஞ்சில் மாவட்டம் ஏனையபகுதியினரால் பொதுவாக மலையாளப்பகுதி என்றே கருதப்பட்டுள்ளது. தமிழகத்தின் தென்கோடி எல்லைப் பகுதியில் உள்ள இந்த நாஞ்சில், தமிழகத்தினராலும் “நம்மவர் அல்ல” என ஒதுக்கப்பட்டு, கேரள பகுதியினராலும் “வேற்றவர்கள்” என சலுகைகள் குறைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் இந்த மாவட்டக்காரர்களுக்கு தங்களுக்குள்ளேயே தாங்கள் யார் என்ற சந்தேகம் தோன்றியிருக்கிறது. இந்த “இரண்டும்கெட்டான்” நிலைதான், பதவிவேட்டைக்காரர்களுக்கு பச்சை நாற்காலி, ஆளவந்தவர்களுக்கு திறந்துவைக்கப்பட்ட பணப்பெட்டி, அரசியல் சூதாடிகளுக்கோ பொன் விளையும் பூமி—பொது மக்களுக்கோ அபாயக்குறி!

கன்னியா குமரிக்கு சென்றிருந்தேன், வங்க கடலின் கிழ்ப்பகுதி அலை ஒரு பகுதியில் மோதுகிறது. அரபிக் கடலின் மேலைப்பகுதி அலைகள் மறுபக்கம் மோதுகிறது. இந்துமா கடலின் பேரலைகள் இரண்டையும் எதிர்க்கிறது. மூன்று பகுதியிலும் எழுப்பப்படுகிற அலைகள், பெரும் கொந்தளிப்பை உண்டாக்குகிறது. கன்னிக் குமரியின் அலைப் போராட்டத்திற்கும், நாஞ்சில் நாட்டின் அரசியல் போராட்டத்திற்கும் அதிக வித்தியாசமில்லை! கன்னிக் குமரி பலரக அலைகளின் கலம்—நாஞ்சிலோ பல அரசியல் கட்சிகளுக்கு ஆராய்ச்சிப் பண்ணை! இந்த அரசியல் பண்ணையிலே தான் திராவிட முன்னேற்றக் கழகம் தன் முதல் மாநாட்டை கூட்டியிருக்கிறது. இதுவரை கூடிய பிற மாவட்ட மாநாடுகள் சென்னை மாகாணத்தில்!

இன்று கூடியிருக்கிற மாநாடோ தமிழும் கேரளமும் கலந்த திருவனந்தபுரம்—கொச்சின் கூட்டு சமஸ்தானத்தில்!

இந்தக் கன்னிக் குமரிதான் முதல் முதலில் மனிதனை உண்டாக்கியது. இந்த மனித உற்பத்திசாலை, மனிதனுக்கான புதிய உலகத்தையும் (New Order) காட்ட முடியும்—காட்ட இருக்கிறது என்பதில் என்ன சந்தேகம்?

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இன்றைய தமிழகத்தின் படித்த பாமர பொதுமக்களின் பிரதிநிதி! 600-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களையும், ஒரு லட்ச அங்கத்தினர்களையும் தமிழகம் பூராவாகவும் உண்டாக்கி, மக்களின் தேவைகளை ஆளவந்தார்களுக்கு எடுத்துக்காட்டி வந்திருக்கிறது—பொதுமக்கள் கூட ஆட்சியாளரிடம் கூறவேண்டிய குறைகளை, எங்கள் கழகத்திடம் தான் ஒப்புவிக்கிறார்களே தவிர, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அசெம்பிளி மெம்பர்களிடம் கூறுவதில்லை! காரணம் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் தங்களுக்குள்ளாகவே கட்சி ஒன்று அமைத்துக்கொண்டு, கட்சி கட்டுப்பாட்டுக்கு அடங்கி, நாட்டு நடப்பையும்—நாட்டு மக்களின் நிலைமையையும்—தேவைகளையும், சட்ட மன்றத்திலே எடுத்துக் கூற முடியாதபடி ஆக்கப்பட்டு விட்டார்கள்! கட்சியின் வாய்பூட்டுச் சட்டத்திற்கு பயந்து, தாங்கள் என்றும் காங்கிரஸ் அபிமானத்தை பெற்று சட்டசபை அங்கத்தினர்களாகவே நீடிக்க வேண்டும் என்ற சுயநல எண்ணத்தில், மக்களின் தேவையை எடுத்துக்கூற மறுத்து விடுகிறார்கள் அல்லது பயந்து விடுகிறார்கள்!

நாட்டை ஆளும் இந்த நல்லதம்பிகளுக்கு ஏன் சட்டசபைக்குள்ளேயே ஒருகட்சி? நாட்டுமக்களின் பிரதிநிதிகளுக்குஏன் முன்தணிக்கை? இதைக் கண்ணுற்ற மக்கள் எங்களிடம் அந்த பணியை ஒப்புவிக்கிறார்கள். அப்படி ஒப்புவிக்கப்பட்ட குறைகள்—தேவைகள் தான் எங்கள் மாநாட்டுத் தீர்மானங்கள்! இந்த சர்க்கார் மக்களின் சர்க்காராக இருந்தால் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்று கவலைப்பட்டால்—எங்கள் தீர்மானங்களுக்கான காரியங்களுக்கான காரியங்களிலே சர்க்கார் இறங்கும் என்று நாங்கள் நம்பின காரணத்தால்தான், நீங்கள் மாநாடுகள் நடத்தி தீர்மானங்களை உருவாக்குகிறோமே தவிர, ஏதோ சர்க்காரை எதிர்க்கவேண்டும் என்ற எண்ணத்திலோ அல்ல! எனவே தான் நாங்கள் மக்களின் நடமாடும் சட்டசபையாக மாறியிருக்கிறோம்!

எங்கள் கழகம் தெளிவாக சொல்லியிருக்கிறது நாங்கள் தேர்தல் சூதாடிகள் அல்ல என்று! இந்த நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்கள் சாதிக்க முடியாத காரியங்களை எங்கள் கழகம் சாதித்திருக்கிறதென்பதை மிக பெருமையோடு எடுத்துக்காட்ட முடியும்! ஆளவந்தார்களால் “மறு விலக்கு” கொண்டுவந்த பொழுது, மக்களின் வரிப்பணத்தை சம்பளமாக, அலவன்சாக வாங்கிக் கொண்டிருக்கும் அவர்களைவிட மிக மிக வேகமாக சூறாவளி பிரச்சாரத்தை மக்களிடம் செய்தோம்! ஜமீன்—இனும் ஒழிப்பு பிரச்சினை வந்தபொழுது ஆளவந்த கட்சியை சேர்ந்தவர்களே சட்டசபையில் எதிர்ப்பு கிளர்ச்சி செய்துகொண்டிருக்க, நாங்கள் தான்மக்களிடையே சுற்றி சுற்றிஆதரவு திரட்டித்தந்தோம். அறநிலைய பாதுகாப்பு மசோதா வந்தகாலை, மடாதிபதிகளின் செல்வாக்கும், பணமும் அவர்களை பயமுறுத்திக் கொண்டிருக்க நாங்கள்தான் மக்களிடையே புள்ளி விபரங்களை எடுத்துக் காட்டி, மடாதிபதிகளின் வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டி மசோதாவுக்குப் பலம் திரட்டித் தந்தோம்!

எனவேதான், நான் நிச்சயம் கூறுவேன், தேர்தலினால்தேர்ந்தெடுக்கப்பட்ட‘கனம்’களைவிட மக்களுக்கு எங்கள் கழகம் அதிகம் சாதித்து தந்திருக்கிறது—ஓட்டுப்பெற்றுசென்றிருக்கிற அவர்களைவிட, எங்கள் கழக வீரர்கள்தான், பொதுமக்களிடம் அதிக செல்வாக்கை, மதிப்பை பெற்றிருக்கிறார்கள்! எனவேதான் நாம் தேர்தலுக்கு நிற்கவில்லை! தேர்தல் நமக்கு புதிதுமல்ல — தேர்தல் நம்மை மதிக்காது என்பதுமல்ல! தேர்தல் நம் பாதையில் தேவையில்லாது—தேர்தலால் நாம் சாதிக்கப் போவதைவிட, தேர்தல் இல்லாமல் நாம் அதிகம் சாதிக்கிறோம்—சாதிக்கப் போகிறோம்!

“விந்தைக் கட்சி” என்பார் அரசியல் வேட்டைக்காரர், “செல்வாக்கு இல்லை” என்பார் தேர்தலில் நின்று தோற்றுப் போனவர், “நின்றால் நல்லது” என்பர் நாஆறிக் கொண்டிருக்கிற புதிய பணக்காரர், “இவர்களால் நிற்க முடியுமா” என நம் ரோஷத்தை கிளறிவிடுவோர், நம் முன் பிரச்சார மேடையிலே நின்று தோற்றுப் போன திடீர் ஞானங்கள்! நீங்கள் இவர்களுக்கெல்லாம் செவி சாய்க்கக் கூடாது. நம் பாதை இவர்களுக்குப் புரியாது—காரணம் உலக வரலாறுகளை அறிந்தவர்கள் அல்லர் இவர்கள்! நம்போக்கு பிடிக்காது இவர்களுக்கு, காரணம் நாம் ஆதிக்க வேட்டைக்காரர்கள் அல்ல! எனவே தான் நாம் மிக மிக உஷாராக மிக மிக நிதானமாக, மிக மிக கண்ணியத்தோடு நாம் வளரவேண்டும்!

எவ்வளவுக்கெவ்வளவு நாம்வளருகிறோமோ, அவ்வளவு நம் பொறுப்பும், கடமையும் அதிகமாகிறது. நாம் அதிகம் வளருவது அவர்களுக்குப் பிடிக்காத காரியம்தானே? தங்களை காப்பாற்றிக் கொள்ள, அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் செய்ய முனைந்து விட்டார்கள். குன்றத்தூரிலே துப்பாக்கிப் பிரயோகம்—பொது மக்கள் மேலே, நாரணமங்கலத்திலே தடியடி தர்பார்—பொது மக்கள் மேலே! பேசச் சென்ற இயக்க வீரர்களின் கைகளிலே விலங்கு! கொள்ளைக் கூட்டத்திற்கு இடப்படவேண்டிய விலங்குகள் நம் இயக்கத் தோழர்களின் கரங்களிலே!

கூறமுடியுமா சர்க்கார் — தோழர் நடராசன் கலகக்காரர் என்று — தோழர் வானமாமலை கலகக்காரர் என்று காட்ட முடியுமா சர்க்கார் எந்த ஒரு நேரத்திலாவது எந்த ஒரு இடத்திலாவது கலகத்துக்கு இந்த தோழர்கள் தயாராக இருந்தார்கள் என்று! கூட்ட நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளவேண்டிய நேரம் போக மற்ற நேரங்கள் பிரயாணத்திலே ரயிலிலே கழிகிறது. மிகுதி ஏதாவது நேரம் கிடைத்தால் தான் உயிர் வாழவேண்டிய அளவுக்கு தேவையான உணவுக்கு வழி செய்துகொள்ளவேண்டியிருக்கிறது இந்த அழகில் இந்த தோழர்களுக்கு ஏது நேரம் கலகம் மூட்ட! பாருங்களேன் நடராசனை—கலக மூச்சு பட்டால் கூட கிழே விழுந்து விடுவாரே! இவருடைய கைகளிலே விலங்குகள்! போடுகிறது மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த மாபெரும் சர்க்கார். இந்த ஒல்லி மனிதரின் கைகளிலே விலங்கு மாட்டி வைத்தால்தான்—தான் வாழ முடியும் என்ற நிலைமையை உண்டாக்கிக் கொண்ட—தன் பயங்கொள்ளி தனத்தை வெளிக்கு காட்டும் இந்த தொடை நடுங்கி சர்க்கார்!

இல்லாவிட்டால் நமக்கு தெரியாதா, காஷ்மீர் போராட்டத்திலே மோதவிடப்படவேண்டிய மூலபலம், ஹைதராபாத்தின் ஆக்ரமிப்பிலே உபயோகப்படுத்தப்படவேண்டிய (அவர்களிடம் இருப்பதில்) கடைசி ஆயுதம், எல்லையிலே ஏற்படும் மாற்றானின் போர் நடவடிக்கைக்கு அனுப்பப்படவேண்டிய குதிரைப் பட்டாளம், சென்னை கோட்டை ஸ்டேஷன் அருகாமையில் பொது மக்களின் மீது ஏவிவிட்ட காரணம்? கைகளிலே உருவிய வாளுடன் வீரர்கள் கொக்கரிக்க, கனைத்துக் கிளம்பும் குதிரைகள் இந்த நாட்டு “பிரஜைகள்” மீது ஏவி விடப்பட்ட போதே எங்களுக்குத் தெரிந்துவிட்டது, இந்த சர்க்காரினால் குதிரைப் பட்டாளம் இல்லாமல் இனி வாழ முடியாது என்று! கடைசி சக்தியையும்—நாகபாணத்தையும்—பிரயோகித்துப் பார்த்துவிட்டது சர்க்கார்- இனிமேல் இதைவிட கோரமான அடக்குமுறை பாணம் வேறொன்றும் இல்லை, அவர்களிடம்—இருந்தது.

சென்னை கோட்டைக்கு என்ன வாளும் வேலும் ஏந்தி முற்றுகையிடவாச் சென்றார்கள் நம் தோழர்கள்? வடநாட்டு மந்திரிகளிடம் வெறுப்பைக் காட்ட அவர்கள் ஏந்தி சென்றது தடிகள் கூட அல்ல சிறிய கருப்புத் துணி! இதைக் கண்டு மிரண்டிருக்கிறது நம்முடைய சர்க்கார்! இரத்தம் சிந்துகிற அளவுக்கு—குதிரைகளின் கால்கள் பட்டு மக்கள் அலறுகிற அளவுக்கு,

(7-ம் பக்கம் பார்க்க)

மணிமண்டபத்தில் 'விஷப் பூச்சிகள்!'

மக்களிடையே 'மநோன்மத்தர்கள்!'

திருவாங்கூர் காங்கிரஸ் ஒரு சிக்கல்கூடு

வீழ்ந்தோர் நாம்—எழுச்சி பெறுவோம்

நாஞ்சில்நாடு திராவிடத்தின் தொட்டில்

நாகர்கோயில் மாநாடு—ஜான் முழக்கம்

பல்லாயிரக்கணக்கில் நாகர்கோயில் 'தியாகராயர் பந்தலில்' குழுமிக் கிடந்த மக்களை வரவேற்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் வி. எம். ஜான் பேசிய பேச்சு - நாஞ்சிலைப்பற்றி நாட்டோருக்குத் தரும் அரிய விளக்கம். அந்த விளக்கத்தின் பகுதிகள்:—

ஏறத்தாழ பத்து இலட்சம் தமிழர்களை ஜனத்தொகையாகக் கொண்ட நாடு நாஞ்சில் நாடு. இங்கு வாழும் மக்கள் அனைவரும் தமிழர்களே. அவர்கள் இல்லங்கள் தமிழ் பயில் மன்றம்; உள்ளங்கள் தமிழ் வளர் சோலை! இந்தியத் துணைக்கண்டத்தின் பூங்கா என்பார்கள்; இயற்கையெழில்கொழிக்கும் திருவாங்கூரை! ஆனால் அத்திருவாங்கூரின் நெற்களஞ்சியம் நாஞ்சி நாடென்பதை ஆட்சிப்பீடமறியும்! வளம் நிறைந்த நாஞ்சி, வகையான கலாச்சாரத்தின் பெட்டகம்! மக்களிலே நூற்றுக்குத்தொண்ணூற்றுக்குமேல் படித்தவர்கள்! விஷயந்தெரிந்தவர்கள்! நாகரீகத்தின் வளர்ப்புத்தொட்டில் லெமூரியா என்றால் உலகிற்கே அந்தப் பாலை அருள் சுரந்தூட்டிய பெருமைக்காக நாஞ்சில் நாடு மார் தட்டிக்கொள்ள முடியும்! இடப்பற்று மட்டுமல்ல இதற்குக் காரணம் இனப்பற்றுங்கூட. வரலாறு போதிப்பதும் அதுதான்.

கலாச்சார, கல்வி வளர்ச்சிக்கு இந்த நாட்டின் இயற்கை நிலையும் மாபெரும் பங்கு வகிக்கிறது என்பதை நான் கூறியாகவேண்டும். எதிர்கால திராவிடம் தனித்து வாழமுடியுமா, பொருட்டுறையில என்பார்க்கு, நாஞ்சில் நாட்டின் இயற்கை வளம் பதில் கூறும் என்று நான் கருதுகிறேன். மலை ஆட்டிப் படைக்கும் அணுவுண்டு, அதைச் செய்வதற்குத் தேவைப்படும் தோரியம், சிர்கண், இல்மனைட் இந்த நாட்டிலே ஏராளம்! பள்ளிவாசல் நீர்வீழ்ச்சி; உருவாகிவரும் பெருஞ்சாணி அணைக்கட்டு, மிக விரைவில் நாஞ்சில் நாட்டை மின் சார மயமாக்கப் போகிறது! மக்களின் வாழ்க்கைத் தேவைக்கேற்ற நெல்! அது நாஞ்சி நாட்டின் தனிப் பெருஞ் சொத்து.

நாஞ்சில் நாடு தமிழ்க் கலைத் துறையின் முற்போக்கிற்குப் பெரும்பங்கைச் செய்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்!

"தக்கணமும் அதிற்சிறந்த திராவிட நற்றிருநாடும்" என்ற நாட்டு வணக்கம் பாடிய மனோன்மணிச் சுந்தரனாரை நாஞ்சித் தமிழகம் உலகிற்கு அளித்தது! அன்னாருஞ் சிலப்பதிகாரப், இந்நாட்டு இளங்கோவடிகளின் கைவண்ணத்திலே உருவான வாடா மலர் பாவலரைப் பார்த்தோம்! இலக்கிய மேதைகளை நாஞ்சி நாடு வெளியுலகிற்கு அளித்தது! கலைவாணர்கள் இந்த நாட்டினின்றும் புறப்பட்டவர்கள். இசைவாணர்கள் பெருகிக்கொண்டே யுள்ளனர்! இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் மூளைபலம் தென்னாட்டிலேதானிருக்கிறது என்பவர்கள், நாஞ்சி நாட்டையும் சேர்த்தே கூறி இருக்கிறார்கள்! புத்தேரியிலே-கவிக்குயில் இன்பநாதம் பொழிகிறது! ஏன், சென்னை யாட்சியாளரின் பெருளாதார மூளை நாஞ்சி நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்டதுதானே! இப்பேற்பட்ட நாஞ்சில் நாட்டில் தான் நாம் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு கூடியுள்ளோம்.

உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் உரிமை முழக்கம் பெருகி வரும் நேரத்தில்—சீன சிவப்பாகி விட்ட நாட்களில்—பர்மா தனியுரிமையோடு முன்னேறும் வேளையில்—இந்தோனேஷியா மண்ணில் விடுதலைக் கால் கோளூன்றி விட்ட சந்தர்ப்பத்தில்—கொரியாவில் தன்னுரிமைப் போராட்டம், இரத்த வெள்ளத்தையும், எதிர்ப்புக் குவியல்களையுந் தாண்டி வேக வேகமாகப் பரவுகையில்—எகிப்து நாட்டைவிட்டு, வெள்ளைத் துருப்புக்களே வெளியேறுங்கள் என்ற முழக்கு கையில்—பிராங்கோவின் கொடுங்கோலாட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க ஸ்பானிய மக்கள் கங்கணங் கட்டுகையில்—தென்னாப்பிரிக்க மலனின் காட்டுமிராண்டித்தனமான எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து அங்கு வாழ் இந்தியர் போர்ப்பிரகடனம் செய்கையில்—மன்னர் ஆட்சியை எதிர்த்து நேப்பாள மக்கள் குமுறி நிற்கையில்—எல்லாவற்றிற்கும் மும்முரமாக, உலகமே இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்து—முறிந்து விழும் முதலாளித்துவத்திற்கு முட்டுக்கொடுத்து, முதலாளித்துவ அமெரிக்கா ஒரு புறமும்—சமதர்மப் பூங்காவாக பாரை மாற்ற சோவியத் யூனியன் மறுபுறமும் நின்று போர்க்களம் விரைகையில்—உலகையாட்டும் அணுக்குண்டைத் தடை செய்ய வார்ஸாவிலே சமாதான மாநாடு நடைபெறுகையில் தான், நாமும் நமது உரிமைக் குரலைக் கிளப்ப, அது, பாசிச வெறியர்களின் செவியைத் துளைக்க, துருப்பிடித்த மூளையைச் செப்பனிட மாநாட்டிலே கூடியிருக்கிறோம்.

நல்ல நேரத்திலே கூடியிருக்கிறோம்! சந்தர்ப்பம் நமது போராட்ட வேகத்தை வலுப்படுத்திய வண்ணமுள்ளது! 1775-ல் நடந்த அமெரிக்கச் சுதந்திர போராட்டம் 1789 பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டு, வெற்றிபுரிக்கு அழைத்துச் செல்லுமானால், இவ்விரண்டு போராட்டங்களும் ஐரிஷ் மக்களின் விடுதலை வேட்கையைக் கிளப்பி விடுமானால், செஞ்சீனாவின் வரலாறு—மாசேதுங்கின் வாழ்க்கை ஓவியம், நமக்கேன் ஒரு பாடமாக அமைதல் கூடாது? இந்தக் கேள்விக் குறிதான் மாநாடு!

அதற்குள்ள பதிலில்தான் நமது எதிர்காலம் அமைய விருக்கிறது.

நாஞ்சில் மாவட்டம், ஏறத்தாழ இருபது, முப்பது ஆண்டுகளாக கழகக் கருத்துக்களைப் பரப்பிடும் பணியில் ஈடுபட்டிருக்கிறது பல்வேறுருவில், பல்வேறு வகையில்! சமூகத்தைச் செல்லரித்த பீடைகளைத் தகர்த்தெறியப் பாடுபட்ட சுயமரியாதை இயக்கத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து சேலம் செப்பனிட்ட பாதை வழி நடந்து, பாதி தூரம் வந்ததும், எதேச்சாதிகாரம்—பிடிவாதம் என்னும் கோடாரியைக் கையிலே தாங்கி இலட்சியச்செடியை வெட்டும் பயங்கரமான நிலைமை கிளம்பியதைக் கண்டோம். நல்ல பாதையிலேச்சாரமா? மணிமண்டபத்திலும் விஷப்பூச்சிகளா? ஏமாற்றமும், வருத்தமும் ஒன்றையொன்று கவ்விப் பிடிக்க ஒரு முடிவுக்குப் பிறகு ஏற்பட்ட விபரீத நிலைகண்டு உடைந்த உள்ளத்தோடு அதே இலட்சிய புரியை நோக்கி. ஆனால் திக்கு வேறு பார்த்து நடக்கலானோம்! பாதை செப்பனிடப்பட்டதும், பொருத்தமானதும், ஜனநாயக மலர் பூத்துக் குலுங்குவதுமாக இருக்கக்கண்டு மகிழ்கிறோம்! செல்லுகின்ற பாதை வழி, ஆர்ப்பாட்டப் போர்பாட்டைப் பாடி முன்னேறிய வண்ணம் உள்ளோம். அண்ணா அவர்கள் கூறிய "வெற்றி தூரத்தில் இல்லை; கண்ணுக்குத் தெரிகிறது" என்ற வார்த்தைகள் தன் மெய்யுருவங் காட்டிப் புன்னகை புரிவதைப் பார்க்கிறோம்.

நாஞ்சில் அரசியல்

நாஞ்சில் நாட்டின் அரசியல் கட்சிகளைப்பற்றிய வரலாறு நீங்கள் நல்ல முறையிலே தெரிந்திருப்பீர்கள் என்று நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ள இயலாதவனுய் இருக்கிறேன். ஆக இந்நாட்டின் அரசியல் மைதானத்திற்கு உங்களை அழைக்கிறேன், கட்சிக் காட்சிகளைக்காண. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, இங்குள்ள அரசியல் கட்சிகளை எந்தக் கண்ணோட்டத்தோடு கவனிக்கிறது என்பதை நான் சொல்லியாகவேண்டும். அதற்கு முன்னால் முன்னேற்றக்கழகவாயிலாக பொதுமக்களுக்கு நாம் என்ன கூறுகிறோம் என்பதை விளக்குதல் மிக மிகத் தேவை.

மொழி, வழி, இந்த அடிப்படையை முதலாக வைத்து இந்த நாட்டின் பழங்குடிமக்களாகிய நாம் வரலாற்றுச் சுவடிப்படி திராவிடர்கள் என்பதும், நமக்கென்று பண்டு பண்டே தனிநாடு இருந்தது என்பதும் ஆட்டும் சுட்டுவிரல் கொண்டே வையத்தை ஆட்டுகின்ற அளவிற்கு வல்லமை பெற்றிருந்தோம் என்பதும், சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகளில் வகையாக வாழ்ந்தோம் என்பதும், ஆனால், அதே இனம் இன்று சமுதாயத் துறையில்,

"தேன் சுரக்கப் பேசி
இந்து சமூகத்தைத்
தின்னுதற்கு
வான் கரனை
விட்டு வந்த
பூசுரரால்"

(6-ம் பக்கம் பார்க்க)



டிசம்பர் 23, 24 தேதிகளில் காஞ்சியில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாட்டின் ஒரு காட்சி.

திராவிட நாடு

ஞாயிறு] 7—1—51 [காஞ்சி

நாஞ்சில் மாநாடு

ஒரேவாரம்; இரண்டு மாநாடுகள்! ஒன்று வடக்கில் இன்னொன்று தெற்கில்

பழம்புகழ் பாராட்டும் காஞ்சியும், தென்குமரி தாலாட்டும் நாஞ்சிலும்—டிசம்பர் 23, 29, தேதிகளில், நமது முரசால், அதிர்ந்தன.

இரண்டு மாநாடுகள்—எழுநாட்களுக்குள்.

காஞ்சியும், நாஞ்சிலும் நமது கழகவளர்ச்சியைப் புதுப்பித்த பொன்னேடுகள். நமக்கு புது உணர்ச்சியும், பூரிப்பு மகிழ்ச்சியும் தரும் அமுதச்சித்திரங்கள். நமது கழகத்துக்கு மக்கள் காட்டும் மதிப்பின் விளக்கக் கண்ணுடிகள்.

இரு மாநாடுகள்-அதுவும் இருமுனைகளில்!

X X X

நாஞ்சில் மாவட்டம்—சேர நாட்டினரின் தொட்டில். திராவிடத் திருநாட்டின் செல்வக் களஞ்சியம்.

அங்கு, நமது முரசு—ஒலித்திருக்கிறது; பெருமிதத்தோடு. மலையாள நண்பர்களும், நம்மை மாற்றார் எனக் கருதும் தோழர்களும்-நமது, குரலைக்கேட்டனர். 'கிட்டவந்து' பேசினர். 'எங்கள் ஆதரவைத் தருவோம்' என்று கூறினர்.

மலையாளப் பத்திரிகையாளர்கள், பொதுச் செயலாளரைச் சந்தித்து உரையாடி உறுதி' தந்த காட்சி — நமது பணி வளர்கிறது என்பதன் அறிகுறி. 'எங்கள் உதவி உங்களுக்கு உண்டு' என்று, அவர்கள் காட்டிய அன்பு, நமது வேலை அதிகமாகிறது என்பதைக் காட்டுகிறது.

இது நாம் எதிர்பாராததல்ல; எனினும் இப்போதுதான் 'அந்த அரும்பு' காணக் கிடைக்கிறது. கன்னடமும் களி தெலுங்கும், கவின் மலையாளமும் திராவிடத்தின் பகுதிகள்—என்பதை அறியச் செய்யவேண்டிய பொறுப்பு, நம்மை அறியாமலே, விரைந்து கொண்டிருக்கிறது.

நாஞ்சில் தமிழர்கள் நிலையை நாம் அறிவோம்; நமது நாஞ்சில் வீரர்களுக்குள்ள தொல்லைகளும் சிரமங்களும் நமக்குத் தெரியாததல்ல. இருமுனைகளில் போராட வேண்டிய, இக்கட்டான நிலை அவர்களுடையது.

ஆயினும், அவைகளைத் தூர விலக்கி, துயர் சூழ்ந்த சமுதாயத்தை இன்பக் கரைக்கு கொண்டு செல்லும் 'கலங்கரை விளக்கங்கள்' அவர்கள்! அவர்கள் 'நினைத்ததைச் செய்யும்' வெற்றி வீரர்கள்! தூண்டா விளக்குகள்! துணிவுள்ள சிங்கங்கள்!!

அவர்களை நாம் வாழ்த்துகிறோம்—கேரளப் பகுதியினரின் 'கேளாக் காது'களை, நம்முடையதாக்கும் அவர்கள் பணி ஓங்கட்டும் என்ற நம் ஆவலோடு!

X X X

நாஞ்சில் மக்கள்-திருவாங்கூர் ஆட்சிக்குஅடங்கியவர்கள்.

தமிழ் பேசப்படும் அந்த வட்டாரம், தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டுமென்ற கிளர்ச்சி—நெடுநாட்களாகவே இருந்து வருகிறது.

அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ், போராடப்போவதாகப் பிரகடனங்கள் செய்ததுண்டு. அறப்போர்! உரிமைப்போர்! என்றெல்லாம் முழக்கமிட்டதுண்டு. ஆனால். அத்தனையும் டில்லி ஆதிபத்யத்தால் மறக்கப்பட்டுவிட்டன. கூடாத காரியம் என்று தடுக்கப்பட்டுவிட்டன.

தங்கள் பகுதி. தமிழகத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்று நாஞ்சில் மக்கள் விரும்புவதன் நோக்கத்தை வரவேற்புக்குழுத் தலைவர் வி. எம். ஜான் எடுததுக்காட்டியுள்ளார். அது நாஞ்சில் பகுதியைப்பற்றிய நமது எண்ணத்தை ஒலிப்பதாகும்.

திருவாங்கூரைச் சுற்றியுள்ள மதுரை, திருநெல்வேலி, கோவை முதலிய மாவட்டங்களோடு இணைக்கக்கூடிய அளவில் தமிழ்பேசும் வட்டாரங்கள் பலஇருக்கின்றன, திருவாங்கூர் ஆட்சிக்குட்பட்டு. அந்த வட்டாரங்களைத் தமிழ்நாட்டுடன் சேர்ப்பது சங்கடமானதல்ல,

நியாயமான இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது வீரமுழக்கமிட்ட காங்கிரசால்!

சமஸ்தானங்கள் யாவும் கலைக்கப்பட்டு, மொழிவழி வட்டாரங்களோடு இணைக்கப்படவேண்டும், என்பதேபொதுவாக எல்லோரும் வலியுறுத்தும் ஆசையாகும்.

திராவிடக் கூட்டாட்சியில், மொழி வழி மாகாணங்கள் இயங்கும்போது, அதுவே செயலில் நிறைவேற்றப்படும் என்றும் நாம், பலமுறை விளக்கியுள்ளோம்.

அந்தந்த மொழி பேசும் மக்கள் சுதந்திரமாக உலவும் நிலைபெறவேண்டும் - அவர்களுடைய அரசியல் வாழ்வு அலைமோதுவதாக இருக்கக்கூடாது.

X X X

நாஞ்சில் மாவீரர்கள் – நல்ல பாதையிலே தங்களைத் திருப்பிக்கொண்டுவிட்ட நல்லிளங் காளைகள்! தங்கள் உரிமைக் கிளர்ச்சியோடு, பொதுக்கூட்டாட்சிக்கும் போரிட வேண்டிய பொறுப்பு அவர்களிடம் பிணைந்து கிடக்கிறது.

வீழ்ந்துபட்ட ஒரு சமுதாயத்தின் விடிவெள்ளிகள் அவர்கள், அவர்கள், பணியும் பவனியும் வளரட்டும்! வாழ்க அவர்கள்!

தெலுங்கு, கன்னட, மலையாளமெங்கும் திராவிட முரசு ஒலிப்போம்!

வீண் போகாது நம் கோரிக்கை ; வெற்றிக் கொடி நாட்டுவோம்

சிலம்பு தந்த 'திரு நாடு'—'திருநாடு' ஏந்துவதா?

நாஞ்சில் காட்சி—நமக்குத் தரும் நம்பிக்கை

நாகர்கோயிலில் பொதுச் செயலாளர்

நாஞ்சில் மாவட்ட மாநாட்டு நிகழ்ச்சிகளின், இறுதிக் கட்டத்தில், டிச. 30ம் நாள் மாலை பொதுச் செயலாளர் சி. என். ஏ. பேசினர். அவர் பேச்சின் மிக முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன:—

"நாஞ்சில் மாவட்டத் தோழர்கள், என்னிடம் வந்து இங்கு தி. மு. க. மாநாடு நடத்தவேண்டுமென்று கேட்டபொழுதெல்லாம் மறுத்து வந்தேன். ஏனெனில் அத்தகைய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லையென்றே கருதினேன். மேலும், நாஞ்சில் பகுதியில் நமக்குள்ள ஆதரவிலே எனக்கு சந்தேகந்தான்-ஏனெனில் இங்கு இயக்கப் பிரசாரம் மிக மிகக் குறைவு — இவையெல்லாம் எண்ணித்தான் முதலில் மாநாடு நடத்த சம்மதம் தரவில்லை. ஆனால் இன்று இங்கு உற்சாக உணர்ச்சிப் பரவியிருப்பதைப் பார்க்கிறேன். கூடியுள்ள இளைஞர்களிடையே விழிப்புணர்ச்சி யேற்பட்டுவிட்டதைக் கண்டு மகிழ்ச்சி யடைகிறேன்.

நாஞ்சில் மாவட்ட மாநாடு, புதியதோர் நம்பிக்கை பிறக்கச் செய்கிறது — இயக்க இலட்சியத்திற்கு புதிய வலிமையைத் தேடித்தருகிறது இந்த மாநாட்டில் ஒழுங்கு முறையும், கட்டுப்பாடும் சிறந்து விளங்குகின்றன. இவைகளைக்காண பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநாட்டை நடத்துபவர்கள் எல்லோரும் இளைஞர்கள், எனினும் ஆற்றல் மிக்கவர்கள். பணம் படைத்தோர் உதவி கிடையாது அவர்களுக்கு — பதவிவகிப்போர் பக்கத்துணையாக நிற்கவில்லை. எனினும் தன்னம்பிக்கையோடு, தங்கள் சலியாத உழைப்பால், மாநாட்டை வெற்றிகரமாக்கிவிட்டார்கள் இளைஞர்கள் — அத்தகையோர் தொகை நாளும் வளரட்டும்!

நாஞ்சில் மாவட்டத்தில் தி. மு. க. மாநாடு நடக்கிறதென்றால் பலவித சந்தேகங்கள் — நாஞ்சில் திருவிதாங்கூரில் ஒரு பகுதியாயிற்றே, எப்படி திராவிடத்தில் சேரும்—கேரளத்தில் இடம் பெறுமா, தமிழகத்தில் இணையுமா என்றெல்லாம் எண்ணக்கூடும். புரியாமல் சங்கடப்படக்கூட நேரிடும்.

எல்லா மாவட்டங்களையும் போல இதனையும் ஒரு மாவட்டமாகவே கருதுகிறோம். அது எப்படி முடியும் என்று யோசிக்கக்கூடும், சிலர். திருவாங்கூரின் ஒரு பகுதியில் இப்பொழுது வாழ்ந்து வருபவர்களானாலும், ஜனநாயகப்படி தமிழகத்தின் ஒரு பகுதியாகத்தான் எதிர்காலத்தில் அமையும். ஆனால் கேரளப் பகுதிகளிலும் தொடர்ந்து மாநாடு நடத்தத் தயங்கமாட்டோம், மலையாள நண்பர்களின் மனமுவந்த ஆதரவு மட்டும் கிடைத்துவிட்டால்!

நமது செல்வங்கள்

ஓராண்டு காலந்தான்: தி. மு. கவின் வயதாகியிருக்கிறதென்றாலும் பத்து பேர் கூடிப் பேசி, புதிதாக முளைத்தோரல்ல, நாங்கள்—முப்பதாண்டாக அறிவுப் பிரசாரம் செய்துவந்த பகுத்தறிவியக்கத்தின் கிளை—சென்ற ஆண்டு திராவிடர் கழகத்தினராக இருந்து, அபிப்பிராய பேதத்தால் விலகி தனியாக இயக்கத்தை நடத்தி வருகிறோம். பெயர்கள் இரண்டாக இருந்தாலும், பெரியார் திராவிட கழகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார். அறிவுப் படையின் இருபெரும்—முகாம்களாக-விளங்குகின்றன.

நாஞ்சில் மாவட்டத்தில் இன்னும் பல கிளைகளை ஏற்படுத்த வேண்டும். நம் பழைய கூடாரத்தை விட்டு, வெளியேறும் பொழுது எத்தகைய வசதியுமில்லை. பணமுமில்லை. எனினும் ஈடுபட்டோம். காரியம் தடைப்பட்டதா? இல்லை பணம் எப்படிக் கிடைத்தது? நமக்குக் கிடைத்துள்ள செல்வங்கள் நம் தோழர்கள்—என் அருமைத் தம்பிமார்கள்! பணம் இரும்புப் பெட்டிகளிலே கிடக்கும்—இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டிகளிலே நடமாடும் செல்வங்கள்! ஆகவேதான் இயக்கம் வேகமாக வளர்கிறது — கொள்கைகள் பளபளப்பையடைந்துள்ளன!

நம் கொள்கைகளை மறுப்போர் தொகை குறைந்துவிட்டது. நேர் மாறாக தூற்றுவோர் பிதற்றல் வளர்ந்துவிட்டது. இது குறையக் குறைய அது வளரும். இது இயற்கை. கொள்கைகளை எதிர்த்துப் பேச, தடுத்துரைக்க எவரும் இல்லை-அவைகளை அலட்சியப்படுத்தலாம், கொள்கைகள் தெளிவாகத்தெரியாததால், கேலி பேசலாம், சரியாக உணராததால், ஒழித்துவிடலாம் என்று எண்ணிக் கிடக்கலாம். அரசியல் சூதாட்டத்தில் அதிக நம்பிக்கையிருப்பதால். ஆனால் எதிர்த்து மட்டும் பேசமுடியாது!

கேரளத்தார் கேட்கவில்லையே, ஆந்திரத்தார் ஆதரிக்கவில்லையே உங்கள் கொள்கைகளை என்கின்றனர். நமக்கு அவர்களும் கொஞ்சம் தொலைவு—நெருங்கிப்பேச நேரமும், வசதியும் இன்னும் வாய்க்கவில்லை. ஆனால், அவர்களுக்கும் நமக்கும்மன வேற்றுமை என்று அர்த்தமல்ல, திராவிட முரசு விரைவில் ஆந்திர, கேரள, கன்னடப்பகுதிகளில் நிச்சயம் கேட்கும்.

நாமும் 'அவர்களும்'

இவர்கள்ஒன்றேடுநிற்கவில்லையே, எல்லாவற்றையும் தொடுகிறார்களே என்று நினைக்கக்கூடும். கல்வியைப் பற்றி, மதமாசுக்களைக்குறித்து, கடவுள் நிலையை விளக்கி, காங்கிரசின் எதிர்காலப் போக்கை எடுத்துக் காட்டி 'டெல்லி' ஆட்சியின் கோணல்களைத் தெளிவாக்கி—இப்படித் தோழர்கள்பேசியுள்ளார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் [illegible]ட்டுமே பேசினர். சுதந்[illegible] ராஜ்யம் என்றனரே ஒழிய[illegible]யும் கூற வில்லையே! இவர்க[illegible]ர புருஷர்களாக இருக்[illegible] இவர்கள் பேசாத பொரு[illegible] என்று ஆச்சரியப்படக்[illegible]

ஒரு ஓவியக்கா[illegible]ப்பதாக எண்ணிக்கொள்[illegible]திரில் திரை பல வண்ண[illegible] தீட்டு கோலகள். ஒ[illegible]டுபவர் பச்சையை எ[illegible] தீட்டு வார்—பிறகு சி[illegible]வுவார் —நீலத்தைக் கொ[illegible] கட்டு வார். பொறுமை[illegible]ந்து கடைசிவரை [illegible]தான் திரையிலே தீட்[illegible]த்திரம் என்னவென்று [illegible]ன்றை மட்டும் பார்த்[illegible]பவர் அந்த நிறத்தை[illegible]வார். ஆனால் பல வர்[illegible]வியர் சித்தரிக்கும் அ[illegible]ந்தச் சோலை அவரு[illegible]பாது. அவரது தீட்டு[illegible]ழுக விட்ட சிகப்பு பு[illegible]ளைப் புள்ளிகள் காட்டி[illegible]புள்ளி மானின் உடலி[illegible]ள்ளிகளாக இருக்கலாம்[illegible]லத்தான் தி. மு. க[illegible]ளைத் துண்டு துண்டா[illegible]கள். சேர்த்துப் பாரு[illegible]டையலாம்.

நாங்கள் மிக[illegible]ழிகளாகக் கூட[illegible]ட்டு சேவாளிகளைப்[illegible]நூல்களைக் கொண்டு[illegible]ரிக்கும் பணியிலே[illegible]ாம். ஓரத்திலே கலை, [illegible]அரசியல், குறுக்கிலே [illegible]கிய வைகளைக் கொண்[illegible]யும் பட்டுத்துணி செ[illegible]டையிலே தநிக குறு[illegible]ங்கியிருக்கிறோம். இரு[illegible]ந்து விடுகிறோம்! நூல்[illegible]னும் எப்படியும் பெற[illegible]தப் பாடு பட்டாலும்[illegible]யிலே அந்தப் பட்டா[illegible]ந்து மகிழத்தான் போ[illegible]

திராவிடர் என்[illegible]த்த மற்றதுமல்ல – பு[illegible]ாழியால நால்வர், இன[illegible]ர்— அவர்களே திரா[illegible]நெல்வேலி, பாளை பல[illegible]லப் பாளையம், பெருந[illegible]யில் வாழ்கின்றவர்களை[illegible]து, 'நீங்கள் யார்?' எ[illegible]ால், 'நாங்கள் திருநெ[illegible]ட மக்கள்' என்று[illegible]தர வேண்டும்! அ[illegible]ன் முன் நாம் திராவி[illegible]விப் பிடப்படுவோம்.

இந்த கூடியுள்[illegible]கர ளர், யார் தமிழர்[illegible]தில் கண்டுபிடித்துவி[illegible]து. ஆனால், ஒரு குஜ[illegible]டு பிடித்துவிடலாம்,[illegible]ட யாலே; வெள்ளை[illegible]டி யும், நிறத்தாலே[illegible]று சொல்லமுடியும், தடித்த உதட்டால், மங்கோலியனைக் காட்டமுடியும், வட்டவடிவமான முகத்தால்; ஜப்பானியனைக் காண்பிக்க இயலும், குள்ள வடிவால்; சீனனைக் காட்ட முடியும், விசித்திர மூக்கால்; சிலோனியனைப் பிரிக்கமுடியும், அவனது விசித்திர சட்டையலங்காரங்களால்! ஆனால், திராவிடரைப் பிரித்துக் காட்டமுடியாது. மொழியாலன்றி!

கலாசாரத்தால், பண்பால், பழக்க வழக்கங்களால், உடையால், உள்ளத்தால் ஒருவரே, திராவிட இனத்தவர். வித்தியாசம் சிறுசிறு அளவிலிருக்கலாம். அது காடைக்கும் கவுதாரிக்குமுள்ளதைப் போல, கிளிக்கும் புறுவுக்குமுள்ளதைப்போல, மைனுவுக்கும் குயிலுக்கும் உள்ளதைபோல! மலையாளி குயிலாக இருக்கலாம். தமிழன் மைனுவாக இருக்கக்கூடும். ஆனால், வித்தியாசம் குயிலுக்கும் கோட்டானுக்கும் உள்ளதைப்போலல்ல — வல்லூறுக்கும் புறுவுக்கும் உள்ளதைப்போலல்ல — இதை நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

சேரநாடுதான் இன்று கேரள நாடாக இருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. தங்களை மலையாளிகள் என்று கூறிக்கொள்வோர் அனைவரும் சேர பரம்பரையினரே. நல்லதொரு தமிழ்க் காப்பியம் தந்த இளங்கோவடிகள் இங்கே உலவினர். அவர் தந்த சிலப்பதிகாரத்தைக் கேரளம் மறந்தாலும், தமிழகம் மறக்கவில்லை. ஆகவேதான் திராவிடர்கள் என்றாவது ஒருநாள் ஒன்றுபட்டே தீர்வார்கள் என்றநம்பிக்கையோடு பணியாற்றுகின்றோம். ஆகவே திராவிடர் என்ற சொல் கற்பனையல்ல, கனவுலக கண்டுபிடிப்புமல்ல காவியத்தில் உள்ள சொல்—சரித்திரத்திலே வருகிற பெயர் — இனத்தின் பண்டைய நாள் பெயர்—அந்தப் பெயரைத்தான் சொல்கிறோம், அரசியல் சூதாட்டப் பெயரையல்ல!

நாஞ்சில் மாவட்டத் தமிழர்களுக்கு அதிகப் பொறுப்புகள் உள்ளன. அவர்கள்தான் கேரளத் தோழர்களுடன் பழகும் வாய்ப்பு பெற்றுள்ளார்கள் அவர்கள் மலையாளத்தாரும் புரிந்து கொள்ளும் வகையில் நம் இயக்கக் கருத்துகளை சிறு சிறு துண்டு வெளியீடுகள் மூலம் விளக்கவேண்டும், மருட்சி ஏற்படாத வகையில், குழப்பம் சூழாத முறையில் — அதற்காகக் கொள்கைகளை விட்டுக் கொடுக்கச் சொல்லவில்லை. சிறிது சிறிதாக விளக்குங்கள் என்கிறேன்.. அத்தகைய ஆர்வம்மிக்க இளைஞர்கள் ஆயிரமாயிரமாக இங்கு கூடியுள்ளனர். ஆகவே, மலையாள நண்பர்களுக்கு ஏற்படுகிற சந்தேகங்களைப் போக்கும் கடமை அவர்களுடையது என்று அறிவித்துக்கொள்கிறேன்.

பரவாதது, ஏன்?

திராவிட நாட்டுப் பிரச்சினை, தமிழ் நாட்டில் பேசப்படுகிறதே என்று கேட்பர். இதனாலேயே மற்றவர்கள் ஆதரிக்கவில்லையென்று அர்த்தமில்லை—கேரளத்தார் சம்மதம் கிடைக்கவில்லை, இன்னும் கேட்காததால், கன்னடத்தார் ஒப்புதல் வரவில்லை, அவர்களைக் காணாததால், ஆந்திரத்தார் ஆதரவு பெறவில்லை, அவர்களை அணுகாததால்! கேட்டு மறுத்ததில்லை நாம் சொல்லி எதிர்த்ததில்லை பழகி அவர்கள் வெறுத்ததில்லை. அப்படியே மறுப்பதாக வாதத்திற்கு வைத்துக்கொண்டாலும், திராவிட நாடு எல்லை குறையுமே தவிர, பிரச்சினை மறைந்து விடாது. சாகிற நேரத்தில் திராவிட நாட்டுப் பிரஜையாகவே சாவோம் என்பது மட்டும் நிச்சயம். இதற்குக் காரணம் பைபலமா என்றால். இல்லை—வெளிநாட்டு உதவியா என்றால் இல்லை. அதற்கான காரணங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்கின்றன மாகாண மக்கள் அனைவரும்புரிந்தும் கொண்டனர். விழித்தும் கொண்டனர். மாகாண ஆட்சியாளரும் மனங்குமுறியபடியே உள்ளனர். சொன்னால் நேரு கோபிப்பார் பிரசாத் பதறுவார் ... இப்படி எண்ணி அடங்கியிருக்கின்றனர். ஆகவே இத்தகைய பீதியால், மருட்சியால் வாய்மூடி யிருக்கிறார்கள். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம். ஆம், அத்தகைய நிலை பிறக்கத்தான் போகிறது. சொல்லத்தான் போகிறார்கள். இது கேலிப் பேச்சல்ல, கற்பனைச் சரக்கல்ல, அரசியல் தந்திரமல்ல—உண்மை!

மலையாளிகளை நசுக்கவே, தனிநாடு கேட்கிறார்கள் தமிழர்கள். இப்படியும் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அது தவறு மட்டுமல்ல, பயங்கரப் பித்தலாட்டம். திராவிடக் கூட்டாட்சி, அவரவர் உரிமை, கலை, மொழி இவைகளில் கை வைக்காது, அங்கங்கே அந்தந்த வட்டாரமொழிகள் பயிலப்படும். அகில உலக தொடர்பிற்குக் கூட்டாட்சி விவகாரங்களுக்கும் ஆங்கிலம் இருக்கும்.

தனிநாடு என்கிறார்களே—அதற்கான தகுதிகள் நமக்குண்டா?-என்கிறார்கள். முதற் காரணம் நம் விருப்பம்! காரணம் சொல்லத் தேவையில்லை. நாம் குற்றவாளியில்லை. நீதிக் கூடாரத்திலே நிற்பவர்களுமல்ல—தனியினம், ஆண்டவர்கள், தன்னாட்சியை இன்று இழந்தவர்கள். ஆகவே, தனிநாடு பெறுவோம் என்பது நம் இதய கீதம். இதற்கு வாதமே தேவையில்லை.

நாம் நாட்டைப பெறும் வீரம் உள்ளவர்கள் — நாம் யோகம், யாகத்தை நம்பியவர்களல்ல — நாம் வருணாஸ்திரம், அக்னியாஸ்திரம் பெற்றுதான் வெற்றி பெற்றவர்களல்ல! சேரன் செங்குட்டுவன் அன்றொருநாள் இமயம்வரை சென்றான். அதற்காக யாகம் செய்யவில்லை. ஆரியர்கள் தமிழரைப் பழித்துப் பேசுகிறார்கள் என்றவுடன் சேரன் செங்குட்டுவன் கண்களிலே கடுங்கோபம் —அவனது தோள்வலிமையிலே அவனுக்கு அபாரநம்பிக்கை-ஆகவே முழக்கமிட்டான். சிங்கத்தின் கூட்டமெனப்படை கிளம்பி விட்டது. கங்கைக்கரையிலே கனகவிசயரைச் சந்தித்தனர். கைலேற்றினர். அவர்கள் வாளை, அவர்தம் நோனைநம்பியே, எதிரிகளை, தங்கள் தாளிலே விழச்செய்யமுடியும் என்ற உறுதி கொண்டவர்கள்—ஜபமாலையைநம்பி யாரும் வாழ்ந்ததில்லை.

திராவிடநாடு சிறுநாடு என்று கூறுகிறார்கள். நாஞ்சில் மாவட்ட அளவுள்ள நேபாளத்தின் உரிமை பற்றி நேரு பேசுகிறார். திபேத் பிரச்சினையை அலசுகிறார். பூட்டான், பெர்ஷியா இன்னும் எத்தனையோ சின்னஞ் சிறு நாடுகள் தனித்து வாழ்கின்றன. ஆனால் சகல தகுதிகளும் உள்ள திராவிடநாடு அந்நியருக்கு அடிமைப்பட்டு கிடக்க வேண்டுமென்கிறார்கள்!

என்னுடைய பொருளை ஒருவரிடம் ஒப்புவிக்கவேண்டுமானால், ஒன்று அந்த ஆள் யோக்கியராக இருக்கவேண்டும், இன்றேல் என் பொருளைக் காக்கும் வல்லமையாவது உள்ளவராக இருக்கவேண்டும், இல்லாவிட்டால் திரும்பித் தருவார் என்ற நம்பிக்கையாவது இருக்க வேண்டும். தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத வடநாட்டிடம் எப்படி, நம் அருமைத் திராவிடத்தை ஒப்படைப்பது? அதனால் தான் திராவிடநாடு கேட்கிறோம்.

பொதுதான்; ஆனால்!

உலகம் பொதுதான். எனினும் நாட்டுக்கு நாடு எல்லையிருக்கிறது. முதல் வீட்டு மேனனும், பக்கத்து வீட்டு பணிக்கரும் நாள் முழுவதும் உறவாடுகிறார்கள், பேசுகிறார்கள், பணியாற்றுகிறார்கள்! இருந்தாலும் இரண்டு வீட்டிற்கும் சுவர் இருக்கிறது. அது மட்டுமா, இரவு பத்து மணிக்கு மேல் படுக்கப் போகிறவர் தெருக்கதவைச் சாத்தித் தாழும் போடுகிறார்—ஏன்? இது விரோதத்தின் அறிகுறியா—இல்லை. உரிமையின் எல்லை. இதனால் ஒருவரையொருவர் திருடர் என்ற எண்ணுகிறார்களா, இல்லையே! ஒரு வீட்டிற்கு முன்னும், பின்னும் கதவுகள் ஏன்? தாழ்ப்பாள்கள்ஏன்? 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்றுபாடுபவரும், கதவை இழுத்துச் சாத்தடா' என்றுதானே உத்திரவு போடுகிறார். ஆனால் நம் வாதங்களை மறுக்க முடியவில்லை. தூற்றுகிறார்கள். அதனால் தளர்ந்து விடமாட்டோம். சகிப்புத் தன்மை நமக்கு ஏராளம் உண்டு என்பதை அவர்கள் உணரவேண்டும்.

புதிதாக டாக்டர் வருகிறார் ஊருக்கு—நோயாளிகள் அவரிடமே அதிகமாகச்செல்கின்றனர். அதற்கு முன் அங்கு 'ஏகராஜா'வாக இருந்த சித்தவைத்தியருக்கு கோபம் வரத்தானே செய்யும். அவரிடம் இருக்கும் சூரணம், செங்கற்றூளாயிற்றே, அவர்தரும் மூலிகை, புழக்கடையிலே இருக்கும் கீரைகள் தானே என்ற இவை நினைவிற்கு வருவதில்லை! ஆமாம், பழையசெல்வாக்கை இழந்து சரிந்துகொண்டிருப்பவர்களுக்கு புதிதாக வளர்ந்திருப்போரைப்பார்த்தால் வயிற்றெரிச்சல் வரும். ஆகவே நம்மைத்தூற்றுகிறார்கள்.

இங்கு மாநாடு கூடியிருக்கிறோம். பணம் படைத்தோர் இல்லை. பெரிய மிட்டா மிராசுகள் இல்லை. ஜரிகைத் தலைப்பாகைகள் இல்லை. மோட்டார் வரிசையைக் காணோம், வெளியில்! பந்தலில் அலங்காரப் பஞ்சமிருக்கலாம்-அறிவுப் பஞ்சம் மட்டுமில்லை!

சிலர் இப்பொழுது நம்மைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டு திரிகிறார்கள். அத்தகைய வசைமொழிகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும். எதையும் தாங்கும் இதயம்வேண்டும். அவர்கள் ஏன் தூற்றுகிறார்கள், தெரியுமா? அப்படிப் பேசுவதால் நம் தோழர்கள் ஆத்திரத்தினால் சண்டைக்கு வருவார்கள். அதைக்கொண்டு 144 தடையுத்தரவு போடலாம். பிறகு இம்மாதிரிக் காரணங்களைக் காட்டி, இயக்கத்தையே சட்ட விரோதமாக்கலாம் என்று திட்டமிட்டு செய்கிற சதிவேலை.

ஆந்தை அலறுகிறது என்பதற்காக மனிதர்கள் சண்டைக்குப் போவதில்லை. நரி ஊளையிட்டால், அதனைத் தடுக்க எவர் முயற்சி செய்வர்? சந்திரன் பூரண ஒளி வீசும்பொழுது பலருக்கு பல எண்ணங்கள் உண்டாகலாம்—ஆனால் திருட்டு எண்ணமுள்ளவனுக்கு இருட்டு இல்லையே என்றஏக்கத்தால் நிலவைக் கடிந்துரைப்பான். அது போல நம் வளர்ச்சியைக் காணும் பொழுது வாழ்விழந்தவர்கள் சிலர் தூற்றுகிறார்கள். அவர்கள் அதைத்தான் பேசுவார்கள்—பேச முடியும்—பேசத்தெரியும். அவர்கள் திட்டம் தீர்ந்துவிட்டது. ஆகவே இல்லைகளைப்பற்றிக் கவலைபடக் கூடாது.

வசை மொழியினால் நாம் ஒழிந்துவிடுவோம் என்றால், ஜின்னாவைப் பாருங்கள். பேனா எடுத்து எழுதத் தெரிந்தவர்கள் எல்லோராலும் தாக்கப் பட்டவர். பேனா பிடித்தவர்கள் அனைவராலும் பிரபந்தம் பாடப்பட்டு போற்றப்பட்ட காந்தியாரே, நேரில்வந்து பிறகு பேசவேண்டியதாயிற்று! ஆகவே தூற்றல் நம்மைத் தினைத்தும் துளைக்கிவிடாது.

சுதந்திரம் பெற்றவர்கள் நாம்—இவர்கள் பார் எங்களைத் தட்டிக் கேட்க என்ற பல்லவியை எங்கும் இவர்கள் பாடுகிறார்கள். இவர்கள் கஷ்டப்பட்டார்கள். ஒத்துக்கொள்கிறோம். பகவத்சிங் தூக்குமேடை ஏறினர், அலிபுரம் சிறையில அவதிப்பட்டார்கள், அடிபட்டார்கள், உதைபட்டார்கள், சிறைக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டார்கள், திருப்பூர் குமரனை பலியிட்டார்கள்—எல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் சுலபத்தில் பெறவேண்டியதை கடினமாக்கிக் கொண்டுவிட்டார்கள்! ஜின்னா ஆடை நலுங்கவில்லை. சிகரெட்புகைப்பதைக் கூட நிறுத்தவில்லை வளைந்து குழைந்து எவரிடமும் பேசவில்லை. தனது ராஜ தந்திரத்தால் அட்லாலையே மாற்றியமைத்தார். இதற்கு இரத்தம் சிந்தவில்லை, ராஜ தந்திரத்தைக் கொண்டே சாதிக்க முடியாததைச் சாதித்தார். இவர்களோ கஷ்டப்பட்டார்கள். கஷ்டப்பட்டும் கேட்ட இந்தியா கிடைக்கவில்லை. பட்ட கஷ்டத்திற்கு பாராட்டுகிறோம். பெற்ற சுதந்திரத்தை நன்முறையில் நடத்தவேண்டும் என்கிறோம். வேறு பல சுதந்திர நாடுகளில் இம்மாதிரி எதிர்ப்புப் பிரசாரம் செய்பவர்களை சுட்டிருக்கிறார்கள். நாங்கள் விட்டு வைத்திருக்கிறோம் என்கிறார்கள். சுடாததற்குக் காரணம், ஜனநாயக உரிமை தருவதற்காகவல்ல, துப்பாக்கிப்பிடிக்கும் பழக்கம் இன்னும் வராததால்! ஆனால் அவர்கள் சுடப்பழகிக்கொள்கிற பொழுது நாங்கள், குண்டு பாய்ந்தாலும், மார் பைத்துளைக்காத மார்க்கம் காண்கிற அளவு வளர்ந்துவிடுவோம்.

சுதந்திரம் பெற்று தந்தார்கள் என்பதற்காக, எங்கள் வாழ்வைச் சூறையாடவும் அனுமதிக்க முடியுமா? வீடு கட்டுகிறான் கொற்றன்-அதற்காக மாலையிடுவோம், மரியாதை செய்வோம். பரிசு தருவோம் ஆனால் மறுநாள் இரவே கையில் கன்னக் கோலோடு வந்து திருட முயற்சி செய்தால் விடமுடியுமா?

சுயராஜ்ய கர்த்தாக்கள் இவர்கள் என்றாலும், வாழ்வை நசுக்க அனுமதிக்க முடியுமா?

இவர்களிடம் வீரமில்லையென்பது மட்டுமல்ல ஆளும்விவேகமும்இல்லை. நிர்வாகத் திறமையில்லை என்பதற்கு எவ்வளவோ உதாரணங்கள். கிடைத்த நேரத்தில் மிருகம் சாப்பிடும் — தேவைப்பட்ட நேரத்தில் உண்பான் மனிதன். இவர்கள் ஆட்சியில் மனிதன் மிருகமாகிறான். ஒரு விஷயத்தில் மட்டுமல்ல உணவு,

(8-ம் பக்கம் பார்க்க)

சமூக உரிமை நீதி மாநாடு
பெரியகுளத்தில்
ஜனவரி 28-ம் (ஞாயிறு) நாளில் நடைபெறும்

தலைவர்: **எஸ். எஸ். மாரிசாமி**
"காண்டீபம்" ஆசிரியர்.

துவக்குபவர்: நடிப்புப்புலவர் **கே. ஆர். ராமசாமி**

சர்வகட்சிப் பிரமுகர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பல்துறை அறிஞர்கள் — கலந்துகொள்வர்.

சி. என். ஏ.வும், மற்றும் பல முன்னணி வீரரும் பங்குகொள்வர்.

வரவேற்புக்குழு

3-ம் பக்கத் தொடர்ச்சி

அடக்கப்பட்டோம் என்பதும், செல்வச் செழிப்பிலே இறுமாந்த நாம் வடநாட்டு மார்வாடிகளால் இன்று சூரையாடப்படுகிறோம் என்பதும் அரசியல் துறையிலே கொத்தடிமைகளாய் வடக்கு நோக்கித் தண்டனிடுகின்ற இழி நிலையைப் பெற்றவர்களாய் இருப்பதும் நமக்குத்தெரிகிறது.

வாழ்ந்தவர்கள் வீழ்ந்து போனோம். நம்நாடு மாற்றார் தம்வேட்டைக்காடாயிற்று. நமது கலாச்சாரம் கேலிக்குரியதாக்கப்பட்டது. நமது பொருளாதாரம் நம்நாட்டுமக்களை வேற்று நாட்டிற்கு கூலிகளாக அனுப்புகின்ற அளவுக்கு வறண்ட பாலைவனமாயிற்று ஆச்சரியம் எனினும் உண்மை. நடக்கமுடியாதது எனினும் நடக்கிறது! இந்த நிலைமைக்கு மாற்றுத்தேடுவதுதான் நம்மவர் இலட்சியம். தமிழனும், தெலுங்கனும், கன்னடியனும், மலையாளியும் ஒரு தாய்வயிற்று மக்கள்; ஒரு தாயின் முலைப்பாலை உண்டு வளர்ந்தவர்கள். அவர்களுக்குள்ளே மாறுபாடு, முரண்பாடு எழுவது இயற்கைக்கு மாறுபட்டது. வரலாற்றுப்படி ஓரினத்தவர்கள். இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை, உரிமை முழக்கம்.

திருவாங்கூர் காங்கிரஸ்

இங்குள்ள அரசியல் கட்சிகளில் மிக முக்கியமான கட்சியாக கருதப்படுவது திருவிதாங்கூர் தமிழ் நாட்டுக் காங்கிரஸ். அவர்களின் அரசியல் நோக்கம் நமது விளக்கத்தைத் தேவைப்படுகிறது. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் இன்று பொதுமக்களிடம் கூறுவதென்ன? அதன் அரசியல் இலட்சியந்தான் என்ன? அது ஒரு சிக்கல் நிறைந்த மாபெரும் புதிர்! மாறிச் சுழலும் நிலையற்றக் கருத்துக் கோர்வைகளின், அமைப்பு முறைகளின், நிலைக்களனாக மாறிவிட்டது, தமிழ் நாட்டுக் காங்கிரஸ். அதன் தேர்தல் பிரகடனம் மக்களுக்குப் பேசியது இதுதான்.

"திருவிதாங்கூரில் தமிழ் மாகாணம் அமைப்பது, சமஸ்தானங்கள் உட்பட மொழிவழி மாகாணம் ஏற்படும்போது, இந்த தமிழ் மாகாணத்தை தாய் தமிழகத்துடன் சேர்த்து ஒரு புதிய தமிழகத்தை அமைப்பது".

தனி மாகாணம் முதல் கோரிக்கை. இரண்டாவது திருவிதாங்கூர்த் தமிழகத்தைப் பிரித்துத் தாய் தமிழகத்தோடு இணைப்பது. பின்னால் முதலிரண்டு பிரச்னைகளும் நடுக்காட்டிலே கொண்டுபோய் கண்ணைக் கட்டி நிறுத்தப்பட்டன.

மூன்றாவது வேறோர் புதுக் கோரிக்கை உருவாயிற்று. மேலிடத்தின் அழுத்தம். காங்கிரஸ் தலைவர்களின் அலட்சிய மனப்பான்மை இதற்குக் காரணமாக அமைந்தது. அந்தக் காரணத்திற்காகத்தான் கருத்தை மூன்று தடவை மாற்றியிருக்கிறார்கள் கவலையில்லை! காலப் பெருவெள்ளம் இக்கருத்தையும் அடித்துக் கொண்டுபோய் இனி எக்கருத்தைக் கொண்டு வருமோ? நாம் அறியோம்!

மொழிவழி மாகாணக் கோரிக்கையை காங்கிரஸ் ஆதரித்தது. மாபெரும் மாநாடுகளிலே தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். ஆனால் அடிமை இந்தியாவிலே நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானங்கள் சுதந்திர இந்தியாவில் செல்லாக் காசுகளாக ஆக்கப்பட்டன.

புண்ணிலே வேல்!

"அந்தக் கோரிக்கை இப்பொழுது கவனிக்கப்பட வேண்டியதல்ல", 'மொழிவழி மாகாணம் பைத்தியம்' இது சுதந்திர இந்தியாவின் தனிப் பெருந் தலைவர்களின் தீர்ப்பு. தீர்ப்பா அது! அடிப்படை உரிமையின் மீது எழுப்பிய கேள்வி! திருவாங்கூர் விஜயம் செய்தார், அண்மையில். ஸ்டேடியம் மைதானத்தில் பண்டிதர் பேசுகிறார் 'திருவிதாங்கூரில் தனி மாகாணம் கோருகிறவர்கள் முட்டாள்கள்" பண்டிதர் வெளிப்படுத்திய இந்த தீர்ப்புரை வெந்த புண்ணிலே ஓர் வேல்! ஒரு காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கொண்ட அரசியல் கருத்தை நிலவிடும் கருத்தாகக்கொண்டு அதற்குப் பதிலிறுத்தார். பதில் அல்ல, தமிழர் தம் ஜீவாதார உரிமையைப் பண்டிதர் பரிகசித்தார். தமிழ்நாடு காங்கிரசின் அடிப்படை இலட்சியப் [illegible] தமிழ்நாட்டு காங்கிரஸ் தன் மௌனப் பட்டியலிலே தயாரித்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் இங்கு வாழும் தமிழர்கள் சுமார் பதினைந்து இலட்சம் பேர்களின் ஏகோபித்த அரசியல் ஸ்தாபனம் என்று கூறப்பட்டது. மொழி காக்கும் பெரும் பணிக்கு அந்த ஸ்தாபனம் செய்த பெரும்[illegible] தனி ஏற்பாடு கூட்டுவதற்காக வருந்துகிறேன். பொதுக் கூட்டங்கள் மூலமாக நாங்கள் அன்பழைப்பு விடுத்தோம் "விபரீதமான இந்தப் போக்கிற்கு ஒரு முடிவுகாண வாருங்கள் ஒத்துழைக்கிறோம் என்று" எங்கள் அன்பழைப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது கூட அல்ல, அந்தக் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினையை கவனிக்கும் நோக்கோ நேரமோ கூட அவர்களுக்கு இருந்ததில்லை! தமிழர் தம் ஆற்றலை மற்றவர் சோதிக்கும் கட்டத்திலெல்லாம் தமிழ்நாடு காங்கிரஸ் அதற்குச் சலுகையும், சந்தர்ப்பமும் செய்து கொடுத்ததே தவிர எதிர்ப்பாற்றலைக் காட்டவில்லை, காட்டமுடியவில்லை.

நமது கட்சியைப் பொறுத்தவரை மொழிவழி மாகாணம் நமது உயிர் கோட்பாடு; எனவே நமது மனப்பூர்வமான ஆதரவு அதற்கு உரியதாகுகிறது.

பிரிகின்ற மொழிவழி மாகாணங்களின் மொழிவழி அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். மலையாள ஆட்சி தமிழ் ஆட்சியைச் சுரண்ட நினைத்தால் நாஞ்சில் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த மொழிபேசும் மக்களின் அடிப்படை உரிமையைக் காக்க களத்திலே குதிக்கும் என்பதை பிரகடனப்படுத்த ஆசைப்படுகிறேன். மொழி ஆதிக்கம் சுரண்டல்முறை எங்கு, எப்படித் தாண்டவம் ஆடினாலும் அதை நாங்கள் கண்டிக்கத் தவறியதில்லை, தவறமாட்டோம். இதுதான் எங்கள் கழகத்தின் இலட்சியம்.

நேர்வழி கண்டு

இன்றைய உலக அமைப்பு, அதிலே ஏற்பட்ட இருக்கிறவன் — இல்லாதவன் கோளாறு, தொழிலாளி —முதலாளி தகராறு, இவைகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் கொடுக்கும் விளக்கவுரை இதுதான். திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்கள் பாசறை. அவர்களின் [illegible] உரிமைக்காக முன்னேற்றக் கழகம் தனது அரசியல் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. திராவிடர்கள், பாட்டாளிகள். வேதனை வாழ்வு கண்டவர்கள். வறுமையோடு மல்லிடுகிறார்கள். பட்டினிக்கு அவர்கள் குடும்பம் இரையாகிறது. உடைந்த உள்ளமும் [illegible] வாழ்வும் அவர்களின் சொத்து! [illegible] இன்றைய பாழ்பட்ட சமுதாய அமைப்பை [illegible] விவசாயி, தொழிலாளியின் [illegible] பெருமூச்சை [illegible] பாட்டாளி, ஊர் வாழ ஆடை நெய்து தன் மானத்தை மறைக்கக் கந்தைகூட இன்றி அல்லலுறும் நெசவாளி, இன்னும் எண்ணற்ற பேர்கள்; வாழ்க்கையைப் பாழாக்கியவர்கள். அவர்களின் வாழ்வு வளர்ச்சியைக்கோரும், அதற்காகப் பாடுபடும் கழகம் நமது கழகம் அரசியல் சூதாட்டக்காரர்கள் சுயநலத்தை மூதலாக வைத்து தொழிலாளி வர்க்கத்தைச் சூறையாட கட்சிவலைகளை வீசியவண்ணம் இருக்கின்றனர். அந்த வலையிலே வீழ்ந்து வல்லமையை பாழ்படுத்தாமல் இருக்க தொழிலாளி வர்க்கத்தை இந்த மாநாடுமூலம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர்

இந்து மதத்தின் வெங்கொடுமையை உணர்ந்து அந்த பயங்கரச் சூழ்நிலையிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு வெளியேறி, மதம் மாறிய மக்கள் இன்று இரண்டும் கெட்டான் சூழ்நிலையில், திரிசங்கு சொர்க்கத்தில் தொங்கிய வண்ணமுள்ளனர். அவர்களின் வாழ்வு பந்தாடப்படுகிறது! ஒரு மதத்திற்கும் இன்னொரு மதத்திற்கும் உள்ள இடை வெளி தூரத்தை அளந்து, எட்டிப்பிடித்தும், திரும்பியும் அவர்கள் வாழ்கின்றனர்! எனவே அவர்களின் வாழ்வு தேங்கிய குட்டையாகயிருப்பதைத்தான் நம்மால் காண முடிகிறது! ஆண்டவன் கைவிட்ட ஓர் இனம், அடுத்தபடி காங்கிரஸ் ஸ்தாபனம் கேலிக்குரியதாக்கிய ஓர் சமூகம், இன்று வாழ முடியவில்லை! எனவே அவர்கள் மனிதர்களாக வாழ, முன்னேற்றக் கழகக் கொடியின் கீழ் குழுமி பணியாற்ற அவர்களை நான் அழைக்கிறேன். அது ஒன்றே அச்சமூகத்திற்கு முன்னேறுவதற்கான மார்க்கம்.

எனவே தான், நமது கழகத்தின் அடிப்படைக் கருத்துக்களை மக்கள் முன்பரப்ப [illegible]ப்படி மாநாடு கூட்டுகிறோம், கூட்ட முற்படும் போது ஆட்சியிடம் தனது ஆதிக்க ஆணவக்கணை தொடுக்கிறது. மனிதாபிமானமும், நாட்டபிமானமும், விடுதலை வேட்கையும், மொழிப்பற்றும் கொண்டவர்கள் எவரும் இந்த அநீதியை பொறுக்க மாட்டார்கள். குமுறி எழும் எரிமலையாகத்தானே அவர்கள் உலவமுடியும்? இந்த எதேச்சாதிகாரப் போக்கை, அவர்களின் அறைகூவலை ஏற்று அதற்குப் பதில் கூறுவதன் மூலம் நமது இலட்சியத்தை நிலைநாட்ட ஆயிரமாயிரம் வாலிபப்பட்டாளங்கள் போர்க்களம் நோக்கி குதிப்பதற்கு தயாராகிக் கொண்டே உள்ளனர்!"

இலங்கைத் திராவிடர்களின் எழுச்சி முரசு!

"முன்னேற்றம்"

(கொழும்பு தி. மு. கழகத் திங்கள் வெளியீடு)

சிறந்த எழுத்தாளர்களின் உயர்ந்த கட்டுரைகள், கவிதைகள், கதைகள், நிறையப் பெற்றது

14—1—51-ல் பொங்கல் மலராக வெளிவருகிறது, மலர் உட்பட ஆண்டுச் சந்தா ரூ. 1—12—0 தமிழ் நாட்டிலும் முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

நிர்வாகி,
"முன்னேற்றம்"
தபால் பெட்டி 1049
(Ad) கொழும்பு.

அடுத்த இதழ்
48 பக்கங்கள் விலை அ. 8.
பொங்கல் மலர்

8-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுமை புரிந்திருக்கிறது இந்த சர்க்கார்!

நாம் சாதாரணமானவர்களாக இருந்தோம், அலட்சியப்படுத்தப்பட்டோம்–கொஞ்சம் வளர்ந்தோம், கொடுமைப் பார்வை திருப்பியது. இன்னும் வளர்ந்தோம், பொறாமைக்காரர்களின் இன்னலும் வளர்ந்தது. அதிகம் வளர்ந்தோம் — கடைசி பாணம் அடக்குமுறை உபயோகிக்கப் பட்டது. நாம் இன்னும் வளருவோம், அவர்களிடம் பிரயோகிக்க ஆயுதம் கிடையாது! இது வளரும் இயக்கத்துக்கு சகஜம்! இவைகளை எல்லாம் எதிர்பார்க்காமல் களத்திலே இறங்கியவர்கள் அல்ல நாம். உலக வரலாற்றிலே நாம் கண்டதெல்லாம்—இரத்தம் சிந்தித்தான் எல்லைக் கோடுகளை வகுத்திருக்கிறார்கள் என்று!

அவர்கள் கூறினார்கள் எண்ண, எழுத, எடுத்துக்கூற உரிமை இருக்கிறதென்று. நாம் நம்பினோம்!— "எல்லா பிரஜைகளுக்கும் தங்கள் கருத்தைப் பேச்சு மூலம், வேறு வகைகளிலும் வெளியிடவும், அமைதியாகவும், ஆயுதமின்றியும் கூட்டம் கூடவும், சபைகள் அமைத்துக் கொள்ளவும் இந்தியப் பிரதேசம் பூராவாகவும் தாராளமாக நடமாடவும்...உரிமை உண்டு"—என்று இந்திய குடியரசு சட்டம் 19. I பிரிவு கூறியது—நாம் மனதார நம்பினோம், நமக்கு உரிமை சாசனம் வழங்கப்பட்டுவிட்டது என்று. ஆனால் கழகத்தின் மேலே பேசாதே என வீசப்படுகிறது நாக்கறுப்பு சட்டம்—குன்னத்தூரிலே, பேசாதே–திருவாரூரிலே பேசாதே, அதிராம்பட்டினத்திலே பேசாதே நாரணமங்கலத்திலேபேசாதே என்று வீசுகிறார்கள்.

குன்னத்தூரிலே பேசிய காரணத்திற்காக கைகளிலே விலங்கு — மக்கள் மேலே துப்பாக்கிப் பிரயோகம் நாடே சிரிக்கிற விந்தை—நல்ல தம்பிகள் "ஆட்சியிலே ஊரடங்கு சட்டம்! நாரணமங்கலத்திலே பேசியதற்காக தடியடி பிரயோகம்—மூன்று மாதம் கடுங்காவல்! இவைகள் சட்டப் பிரகாரம் நடவடிக்கையாம் கூறுகிறது "நம்ம" சர்க்கார்! "சட்டப் பிரகாரம்" நடவடிக்கை! இந்த "சட்டம்" எங்கிருந்து இவர்களுக்கு வந்ததோ நாமறியோம்! எண்ணவும் எழுதவும் எடுத்துக் கூறவுமான பிரஜா உரிமையை இந்திய அரசியல் சட்டம் குடிமகனுக்கு வழங்கியிருக்க, எங்கிருந்து வந்ததோ சட்டம் நாமறியோம்! அதே சட்டம் கூறுகிறது—

"இந்த அரசியல் ஆரம்பமாவதற்கு முன்னால், எந்த பகுதிகள் இந்த பாகத்துக்கு முரணாக இருக்கிறதோ அப்பகுதிகள் இனி செல்லாது"—என 13 (1) பிரிவு கூறுகிறது. திட்டவட்டமான இந்தச் சட்டத்தை கவனிக்க மறுத்துவிட்ட மாகாண மந்திரிகளுக்கு — ஆளவந்தார்களுக்கு எங்கிருந்து வந்ததோ சட்டம்! மக்களின் அடிப்படை உரிமையை மறுக்கிற பழைய கிரிமினல் 144, இந்திய அரசியல் சட்டத்தை அவமானப்படுத்துகிற இந்த 19ம் நூற்றாண்டு பழைய சட்டம் 144 எப்படித்தான் செல்லுபடியாகுமோ நாமறியோம்! மக்களின் சட்டத்திற்கு மதிப்பளிக்காத இந்த சர்க்கார் மக்களின் சட்டத்தை மீறிய இந்த மந்திரிகள் —என்றுமே மக்களின் இலக்கிலிருந்து தவறி விடமாட்டார்கள்! நான் நிச்சயம் கூறுகிறேன் இவர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்லர் மக்களை மதிக்காமல், மக்களின் சட்டத்தை அவமானப்படுத்தும் இவர்கள், ஜார் மன்னனின் பிரதிநிதிகள்! சார்லஸ் மன்னனின் பரம்பரை! ஏதேச்சாதிகார ஹிட்லரின் சிஷ்ய கோடிகள்! முசோலினியின் மறுமதிப்பு! டையர் வெலிங்டனின் திரு அவதாரங்கள்!

நாட்டின் நல்லாட்சியிலே கவனத்தை செலுத்தவேண்டிய நம் மந்திரிகள் ராஜ்ய நிர்வாகத்திலே ஏன் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். மந்திரிகள் வேலை என்ன சாசுவதமா? இராமன், விபூஷணனுக்கு வழங்கியது போல உலகம் உள்ளளவும் தாரை வார்த்து தரப்பட்டிருக்கிறதா? நம்முடைய மந்திரிகளுக்கு நாட்டின் பல பகுதிகளிலே இருக்கிற கலியுகதீர திட்டம் வகுக்க நேரமேது —தேவைகளுக்கு பரிகாரம் தேடக் காணோம்!

சோறுடைத்த சோழ நாட்டிலே சோற்றுக்கு பஞ்சம் என்று செய்தி வருகிறது. ஆனைகட்டி போரடித்த தென் மதுரை—அங்கேதான் கற்றாழைக்கிழங்கை தின்கிறார்கள்!–அதன் விஷம் அவர்களின் உயிரைப் போக்குகிறது' ஒருவேளை சோற்றுக்கு, தான் பெற்ற குழந்தையை தாய் விற்கிறாள் தாமிர வருணியின் கரை ஓரங்களிலே செய்திவருகிறது. புதுவாழ்வு கனவு கண்ட இளந்தம்பதிகள் புளியங்கொட்டையைத் தின்கிறார்கள்; சேலத்திலே—கவனிக்கவில்லை நல்ல மந்திரிகள்! எனிந்த பஞ்சம், எனிந்த கொடுமை என்பதை நாட்டம் செலுத்தாத மந்திரிகள் பஞ்சத்தின் காரணமறிந்து பசிநோக்க நினையாத மந்திரிகள்–பத்திரிகைகளுக்கு சுற்றறிக்கை விடுகிறார்களாம், பஞ்ச செய்தியை வெளியிடாதீர்கள் என்று! நாட்டு நடப்பை விளக்கும் செய்தி பத்திரிகை—அதற்கு வாய்ப்பூட்டு. தங்களின் திறமை கெட்ட ஆட்சியை எண்ணிப்பாராத சர்க்கார், பத்திரிகைகள் மேலே பாய்கிறது! நாட்டின் விளைச்சல் கணக்கை நீங்களே பாருங்கள். இந்த நல்லதம்பிகள் ஆட்சியிலே விளைவு நிலம் குறைந்திருக்கிற கணக்கை நீங்களே பாருங்கள்:—

சென்னை மாகாண உணவு உற்பத்தி

	உற்பத்தி	இறக்குமதி
	டன்	டன்
44—45	50,53978	17000
46—47	49,19,442	444.100
47—48	43,29.611	2,48524
49—50	38,11000	2,23590

பற்றாக்குறை மாகாணம் என விளம்பரப்படுத்தப்படுகிற இந்த மாகாணம் விளைந்திருக்கிற கணக்கு இது! இதுவா பற்றாக்குறை மாகாணம். வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலே இந்த மாகாணம் இறக்குமதி செய்தது. 17000 டன்! இன்று இறக்குமதி செய்திருக்கிறது 2 23590 டன்.!! பற்றாக்குறை மாகாணம் என்று கூறுகிறது. இந்த விளக்க திறமையற்ற சர்க்கார்! எவிது? கூறவேண்டாமா இந்தசர்க்கார் ஏனிந்த விளைவு குறைவுஎன்று

கிணறு வெட்ட மானியம் தந்தார்கள் — விளையவில்லை! குளம் வெட்ட ஏரி வெட்ட மானியம் விளையவில்லை! குளம், ஏரிகளைபழுது பார்க்கால இலட்சம்–விளையவில்லை' தீவிர உற்பத்தித் திட்டம்–பலஇலட்சம் மானியம்! பயிர் விளையவில்லை. புறம்போக்கு மானியம் பயிர்விளைவு இல்லை. தியாக மானியம் பிர்க்கா டெவலப்மெண்ட் பலகோடி ரூபாய்கள் வாரி இறைத்தார்கள் நிலம் விளைய மறுத்துவிட்டது' இப்படி விளையாததற்குக்காரணம் மந்திரிகள் பணத்தை வீண்விரையம்செய்திருக்கிறார்கள் என்பதை தவிர வேறு இருக்கமுடியுமா—விளையாட்டுபுத்தியிலே செலவிட்டார்கள் என்பதை தவிர வேறு என்ன? 1943 –44-ல் கொடுக்கப்பட்ட ரூபாய்க்கு 16 அவுன்சிலிருந்து, 12 அவுன்சாகி,10 அவுன்சாகி, 8 ஆகி, 6 ஆகி இருக்கிறது. 1949 50ல்! இதிலிருந்தே தெரியவில்லையா புத்திசாலிகளின் கைகளிலே நாடு இருக்கிறதென்று! என்று, முழக்கமிட்ட தோழர் இளங்கோ, பலவழிகளிலும் இந்த ஆளவந்தார் முறைகெட்டு ஒழுங்கின்றி நடந்து கொள்ளும் போக்குகளைத் தக்க ஆதாரங்களோடு எடுத்தக் கூறி கண்டித்து, மாநாட்டைத் துவக்கிவைத்தார்.

*

ஐயோ, காங்கிரசே!

"திராவிட இயக்கத்திற்கு முடிவு கட்ட தமிழ் மாகாண திராவிட எதிர்ப்பு மாநாடு சென்னையில் நடைபெறும்."

— ஒரு செய்தி.

★

"திராவிட இயக்க எதிர்ப்புக்காக காங்கிரஸ் தலைவர் பணம் வசூல் செய்தது எவ்வளவு? இப்படி வசூல் செய்த பணம் எவ்வகையில் செலவிடப்பட்டது."

—தமி. கா. க.
உறுப்பினர்

—திருப்பத்தூர் கிருஷ்ணசாமி
கேள்வி

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்

—X—

7—1—51ல் நடக்க விருந்த தி. பெ. மு. க. துவக்க விழா 21—1—51 அன்று நடைபெறுமென செயலாளர் தோழியர் அலமேலு அம்மையார் அறிவிக்கிறார்கள்

சமூக உரிமை நீதி மாநாடு பெரியகுளம்

—X—

ஜனவரி 28ம் தேதி பெரியகுளம் வடகரை அனுமார் கோயிலின் பக்கம் அலங்கரிக்கப்படும் கொட்டகையான "திருவள்ளுவர் காவண"த்தில் மாநாடு நடைபெறும். மாநாட்டுப் பந்தலில் "தகுதித் திறமை" விளக்க திராவிட அறிஞர்களது ஓவியங்கள் நீட்டிய சித்திரங்களும், புள்ளிவிவரக் குறிப்பும் காட்சியாக வைக்கப்படும். 'காதல்' ஆசிரியர் அரு. இராமநாதன் தீட்டியுள்ள சீர்திருத்த நாடகமான "வானவில்" நாடகத்தை தமிழிசை நாடகக் குழுவினர் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வ கட்சியின் தலைவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள் வருவதாக இசைவு கிடைத்துவிட்டது. என மீ. சு. இளமுருகு அறிவிக்கிறார்.

*

"தொண்டு"

நண்பர் வ. வீராசாமி பி. ஏ., வை ஆசிரியராகக் கொண்டு திருச்சியிலிருந்து வெளிவரும் 'தொண்டு' காணப் பெற்றோம். பிற்பட்டோர் துயர் போக்க புறப்பட்டிருக்கும் தொண்டின் முரசு, நாடெங்கும் ஒலிக்கவேண்டுமென விரும்புகிறோம். பழைமை இருள் நீக்கி, மூடநம்பிக்கை விலக்கி, புது உலகப் பாதையில் பவனி வரும் தொண்டு வளர்க! வாழ்க!!

*

கரூர் தி. மு. க.

• 24—12—50 அன்று இரவு 9-30 மணிக்கு கரூர் தி. மு. க. செயற்குழு அமைப்புக் கூட்டம் தோழர் தனமனோகரன் தலைமையில் கூடியது.

பொதுச் செயலாளர்: எம். கே. கரிகாலன், துணைச்செயலாளர்: எஸ். கிருட்டிணன், பொருள் உறுப்பினர்: எஸ். நல்லசாமி, விளம்பர உறுப்பினர்: எம். முருகேசன், மற்றைய செயற்குழுவினர்: பொன்னுசாமி, கே. இராமச்சந்திரன், சென்னியப்பன், சக்திவேல், அருள்தாஸ், தனமனோகரன், குஞ்சு.

நாடக ஆசிரியருக்கு நிதி அளிப்பு

—X—

1-1-51 மாலை சென்னை ஒற்றைவாடையில், நாடக ஆசிரியர் டி. பி. பொன்னுசாமிக்கு நடிகவேள் எம். ஆர். ராதாவின் 'இரத்தக் கண்ணீர்' நாடக வசூல்மூலம் நிதி அளிக்கப் பட்டது.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் ரூ. 1000 கொண்ட நிதி முடிப்பை தோழியர் டி. ஏ. மதுரம் அளித்தார்.

நடிகவேள் ராதாவுக்கு பலர் சார்பில், பரிசுகள் வழங்கப் பட்டன.

*



காஞ்சி மாநாட்டில் பெண்கள் பகுதி: ஒரு காட்சி.

1-ம் பக்கத் தொடர்ச்சி

பெயரில காலித்தனம் செய்தாலும் அதற்குப் பெயர் கலை—இதுதான் நீதியா? அண்ணல் காந்தியார் வகுத்துத் தந்த சன்மார்க்க வழியா? இதற்காகத்தான் நேதாஜி போரிட்டதா? இந்தக் கொடுங்கோலர்கள் தாம் சுயராஜ்யத்தில் பேரிகை கொட்டுவார்கள் என்று தெரிந்திருந்தால் திருப்பூர் குமரன் உயிரைத் தியாகம்கூட செய்திருக்கமாட்டாரே!

பத்திரிகைப் பதர்கள்

இவர்கள் அக்ரமத்தின் எல்லையைக் குன்றத்தூரில் கண்டோம். பேச்சுரிமையைக்காக்க 144 தடையை மீற நமது கழகம் தீர்மானித்தது. இந்திய அரசியல் சட்டபிரகாரம் இது குற்றமாகாது. ஆனாலும் போலீசார் உருவில் அரசாங்கம் பேயாட்டம் ஆடியுள்ளது கைது — தடியடி — கண்ணீர்ப்புகை — துப்பாக்கி ஆகிய கபர்தாருடன் அன்று அரசாங்கம் நடந்துகொண்டிருந்த விதத்தைக் காந்தியார் கண்டிருந்தாரானல் கண்ணீர் வடித்திருப்பார் —ஜெனரல் டயர் சிரித்திருப்பான். ஆப்ரிக்காவில் 2 இந்தியர்கள் கீழே விழுந்ததால் காலிமேலே காயம் ஏற்பட்டுவிட்டது! இது அடுக்குமா? அநியாயம். சிலோனில இந்தியர் தொல்லை என்று பனித தர்மத்தைக் காக்க வாயளவில் போராடும் இந்த நாட்டு தேசிய இதழ்கள் குன்றத்தூர் கோரத்தாண்டவப்பற்றி வாய் மூடிவிட்டன. பத்திரிகைகள் அவைகள்? பத்திரிகை என்ற பெயருக்கு அருகதையற்ற வெறும் பதர்கள்— பத்திரிகை தர்மத்தையே மறந்து வெறும் தேசிய தம்பட்டமடிக்கும் தப்பட்டைகள்!

இப்படி யெல்லாம் அடக்குமுறையை வீசி, ஆள் அம்பை வீசி, நமது கழகத்தை அடக்க முயற்சிக்கும் அரசாங்கத்துக்கு பத்திரிகை பலமிருந்தும், பண பலமிருந்தும் ஏன் நமது கழகத்தைக் கொல்லைப் புற வழியில் தாக்கவேண்டும்? நேர்மையான நியாயமான வழியில் நட்பு முறையில் வாய் திறந்து வாதிட்டுப் பார்க்கலாமே! அதற்கு அவர்கள் பின்வாங்குவானேன்? அவ்வளவு வலிவற்றதா அவர்கள் கொள்கைகள் அடக்குமுறை ஆயுதத்தை ஏந்திவிட்ட அவர்கள் அறிவாயுதத்தை என்றோ மறந்துவிட்டார் போலும்!

அந்த 'டில்லி'!

வருமான வரி, சுங்கவரி, கலால் வரி, தபால் தந்தி ரயில வருமானம் இப்போது விற்பனை வரியில் பாகமும் ஆகிய இவ்வளவையும் வாரி டில்லிப் பணப்பெட்டிக்கு அனுப்பிவிட்டு இந்த சர்க்கார் பணமில்லை என்ற பஞ்ச நிலைக்கு நம்மைத் தூரத்தி வருகிறது! ஆனல் இப்படி போகிற பணம் நமது [illegible] பாவித் தனத்தால் எவ்விதம் சீரழிகிறது? கணக்கு காட்டும் சனவான்களை மிரளுகிறார்கள் வெளிநாடுகளில நமது ஏழை அழுத கண்ணீர், சிகரெட் புகையாகவும், பிராந்தி பாட்டில்களாகவும், பால்ரூம் டான்சாகவும், வெள்ளை மாதர் சிநேகமாகவும் விருந்து வேடிக்கைகளாகவும் ஆடம்பர ரோல்ஸ்ராய்ஸ் கார்களாகவும் ஊதாரித்தனமாகஒழிக்கப்படுகிறது! இங்கேயோ எந்தவித காரியத்துக்கும் பணமில்லையென்ற பல்லவியைக் கேட்டு, காயமே இது பொய்யடா காற்றடைந்த பையடா என்ற பாட்டைப் பாடி மரம் வைத்தவன் நீர் வார்க்கமாட்டானு என்ற வறட்டு வேதாந்தம் பேசி, விதி, முன்வினையில் நம்பிக்கை வைத்து நமது நாட்டுத் தோழன் நாசமடைகிறான்.

இங்கே நமக்கு வாழ வழியில்லை; நமது பணத்தைக் கொள்ளையடித்துச் செல்லும் மத்ய சர்க்கார் பகல் வாணம் விடுகிறது! இந்த நிலை நீடிக்க வேண்டுமா? நாம் சுதந்திரமாக மத்திய சர்க்கார் ஆட்சியிலிருந்து பிரிந்து தனியரசு அமைத்துக் கொண்டால் நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்ளலாம். அவர்களுக்குப் புரியவில்லை அதற்கு மாறாக நமது இயக்கத்தைத் தூஷிக்க பெக்ளுடிகள் தயாரிப்பதில கோத்தைச் செலவிடுகிறார்கள்.

நமது நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை, மொழிவாரி மாகாணப் பிரிவினைத் திட்டத்தோடு இணைத்துப் பேசி குட்டையைக் குழப்புகிறார்கள். நமது திராவிட தனியரசு சுதந்தர சர்க்கார்; டில்லி ஆதிபத்தியத்துக்கு அடிமைப்பட்டதல்ல எந்த ஒரு காரியத்தையும் நம்மீது திணிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்காது.

ஆனல், மொழிவாரி மாகாணம் மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்ட அடிமைப்பட்ட சர்க்காரைக் கொண்ட நாட்டுப் பிரிவு. இந்தப் பிரிவினையால் மத்திய சர்க்காருக்கு வேலைத் தொந்தரவும், நிர்வாகப் பொறுப்பும் சற்றுக் குறையும்; அதற்கு உதவியாக இருக்கும். மொழிவழி மாகாணப் பிரிவினைக்கு காங்கிரஸ் மேலிடமோ மத்திய சர்க்காரோ ஒத்துக்கொள்வதென்றல் மாகாண சுதந்திரத்தின் மீது கொண்டுள்ள காதலால் அல்ல! தனது வசதிக்காக.

தமிழர் உரிமையைக் காக்கப் போரிடும் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தமிழ் மொழியை ஒழிக்க இந்தி கட்டாயமாகப் புகுத்தப்பட்டபோது இவர்கள் தங்கள் சிறுவிரலைக்கூட இந்திக்கு எதிர்த்துக் காட்டவில்லை. அது மட்டுமல்ல இந்தியை எதிர்த்த நம் முடனும் ஒத்துழைக்கவில்லை. ஆகவே அவர்களது நோக்கத்திலும் நமக்கு நம்பிக்கை இல்லை.

எனவேதான் திராவிட முன்னேற்றக்கழகம் வடநாட்டிலிருந்து பிரிந்து தனி திராவிடநாடு அமைக்கவிரும்புகிறது. திருவாங்கூர், கொச்சி, மைசூர், ஹைதராபாத்தின் ஒரு பகுதி எல்லாம் சென்னை மாகாணத்துடன் இணைக்கப்பட்டு மொழி வழி மாகாணங்களை அமைத்துத் திராவிடர் அனைவரும் சுதந்தர மக்களாக வாழவேண்டும் என்று விரும்புகிறோம்!" என்பதாக, மற்றும் பல பிரச்சினைகளை விளக்கி வீர முழக்கமிட்டார்.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

உடை, சகலவசதிகளிலும் இதே நிலை 'டெல்லி' மந்திரிகளுக்கோ ஆளவும் தெரியவில்லை ஒரு உதாரணம் பாருங்கள். ஜீப்கார்களுக்கு 'ஆர்டர்' தந்தார்களாம். 250 கார்கள்மட்டும் வந்தன. மற்றவை வருமுன் அந்தக் கம்பெனி கலைக்கப்பட்டுவிட்டதாம். இப்பொழுது அதுபற்றிவிசாரணை நடத்த ஒரு கமிட்டியாம் இதற்கு எவ்வளவு இலட்சங்கள் செலவு? இவர்களிடம்தான் நம் திராவிடநாடு சிக்கிக்கொண்டுள்ளது என்று நினைக்கும்பொழுது வேதனையாக இருக்கிறது.

பாகிஸ்தான் தனக்குக்கிடைக்கும் சணலைக்கொண்டு, உலகத்திடம் செல்வாக்கு தேடுகிறது. திருவாங்கூரில் கிடைக்கும் மணலைக்கொண்டு அத்தகைய பெருமையடைய முடியும். ஆனல் இந்தியாவோபேராசைக்கார அமெரிக்காவின் முன்னேடும் பிள்ளையாக இருக்கிறது. ஆகவே திகிலோடு வாழவேண்டியுள்ளது.

நாம் திராவிடநாடு பிரிந்தால் இன்னின்ன நன்மைகள் என்று செல்கிறோம். அதுபோல, திராவிடநாடு கூடாது என்பவர்கள் சேர்ந்திருப்பதால் உள்ள நன்மைகளைச் சொல்லட்டும்—பிரிந்தால் வரும் நஷ்டங்களை எடுத்துக் காட்டட்டும். இங்கே எல்லாம் வடநாட்டு சீமான்கள்—ஆணி முதல், பெரிய தண்டவாளங்கள் வரை டாடாவினுடையது— சிமெண்ட் டால்மியாவுடையது. பஜாஜ், பிர்லா ஆடை—இப்படி எல்லாம் அவர்கள் பொருள்களுக்கு திராவிடநாடு 'மார்க்கட்டாக' மாறிவிட்டது. மூலப் பொருள்கள் எல்லாம் வடநாட்டுக்குப் போய் விடுகின்றன. ஆகவே தொழில் வளம் இல்லை. எனவே தொழிலாளிக்கு வேலையில்லை. இங்கு ஒரு நீக்ரோ குப்பை கூட்டுகிறன, ரிக்ஷா இழுக்கிறனே? சேரன் வழி வந்தோன், பாண்டியன் பரம்பரையினர் என்று பாராட்டப்பட்டோர், சோழ மன்னரின் சந்ததியினர் என்று உயர்த்திப் பேசப்பட்டோர் சிலோனில் சேனநாயகாவின் கேலிச் சவுக்கடிக்கிடையே ரிக்ஷா இழுக்கிறனே! தென்னப்ரிக்காவிலே திகிலோடு வாழ்கிறனே! பர்மாவிலே பதைபதைப்போடு உலவுகிறனே! ஏன்? பஞ்சாபியோ, குஜராத்தியோ அங்கு இழிதொழில் செய்யவில்லையே, வட்டிக்கடை வைத்திருப்பதைத் தவிர! வடநாட்டினர் இங்கு வாழ்கின்றனர். நாட்டுக்குடையோரோ, கடல் கடந்து, தூரதேசங்களில் கூலிகளாய் உழலுகிறார்கள்! ஏன்? இருவரும் அந்நிய நாட்டிலே தானே உலவுகிறார்கள். தரித்திரம் என்றல் சிலரைத் தேள் போலக் கொட்டுவதும், வேறு சிலருக்குத் தேன்புட்டியாவதும் ஏனே? இந்த சூதின் காரணம் என்ன?

முதலாளி, பெரிய மார்க்கட் தேடுகிறன். நேரு முதலாளியில்லை— பெரிய நாடு கேட்க! எனினும் தொழிலாளிகள் விஷயத்தில் அவரது சர்க்கார் முதலாளியாகவே நடந்து வந்துள்ளது. வெட்கம் துளியுமின்றி, பயம் சிறிதுமின்றி, தொழில்களை தேசிய மயமாக்கப் போவதில்லையென்று சொல்லிவிட்டார்கள்— ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை நாட்டினில் என்று பாடியவர்கள் அவர்கள்!

இத்தகைய நிலைமைகளை ஆய்ந்து தோய்ந்து பார்ப்பவர்கள் எவரும் இந்திய மத்திய ஆட்சி தென்னட்டிற்குத் தேவையென்று சொல்ல மாட்டார்கள். திராவிட நாடு பெறுவது நம் பிறப்புரிமை. தடுத்துப் பேச பலம் இருக்கலாம், அவர்களுக்கு—ஆனல் அதிகாரம் கிடையாது அவர்களுக்கு—நம் உரிமையைப் பறிக்க முடியாது!" என்று கூறி தன் உரையை முடித்தார்.

ஏஜண்டு தோழர்களுக்கு

பொங்கல் மலருக்குரிய தொகையை, ஏஜண்டுத் தோழர்கள் முன் பணமாக அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அனுப்பாதவர்களுக்கு மலர் அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்,

மானேஜர்

கேரள நிருபர்கள் சி. என். ஏ. சந்திப்பு

நாஞ்சில் மாவட்ட மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். ஏ-வை திருவாங்கூரைச் சேர்ந்த பன்னிரண்டு பத்திரிகை நிருபர்களும், ஒரு சட்டசபை உறுப்பினரும் சந்தித்தனர்.

டிச 30. அன்று பகல் 1½ மணி நேரம் அவர்களது சந்திப்பு நடைபெற்றது. பொதுச் செயலாளர் அவர்களுடைய சந்தேகங்களுக்கெல்லாம் தக்கபதிலிறுத்தார்.

முழு விவரமும் – உரையாடலும் அடுத்த இதழில் வரும்.

தோழர்களுக்கு

பிறப்பு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் வெளிவரவேண்டிய கழக செய்திகளையும் 'மாலைமணி' தினசரிக்கு அனுப்பி வைப்பதே நல்லது. தோழர்கள் கவனிக்க வேண்டுகிறோம். (ஆ-ர்)

வாணியம்பாடியில் திருவள்ளுவர் திருநாள்

தலைவர்

திரு. யோகசுந்தரம் M.A.L.T.

பேச்சாளர்கள் புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன்

சு. மு. அண்ணல்தங்கோ.

காலம்:- 7—1—51 ஞாயிறன்று

மாலை 5 மணிக்கு

குறிப்பு:- அறிஞர் அப்பாதுரை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், ஆகியோரின் எழுத்தோவியங்கள் அடங்கிய "வள்ளுவர் மலர்" திருநாளில் கிடைக்கும்.

தலைவர்:- அ. சின்னராசன், பொருளாளர் :— க. சை மாலிக், விளம்பர உறுப்பினர்கள் :- இரா. கங்காதரன், எஸ். என். நடராசன், செயலாளர்கள்:- வா. கோ. செல்வராசன், இரா. நடராசன். (A)

திராவிடன்

(ஆசிரியர் என். வி. நடராசன்)

பொங்கல் மலர்

கவிஞர் பாரதிதாசன், சி. என். ஏ. உள்பட பலரின் எழுத்தோவியங்கள்.

அழகு வர்ணப் படங்கள்.

விலை ரூ. 1

விற்பனையாளருக்கு 25% கழிவு உண்டு.

திராவிடன் காரியாலயம்

18, பெருமாள் முதலி தெரு

ஜி. டி. சென்னை.

மதுரை அனுப்பானடி

ஐயப்பசாமி தியேட்டரில்

14—1—51 ஞாயிறு பொங்கல் திருநாளன்று

இரவு 10-மணிக்கு

எல். எம். மாரியப்பா, திருச்சி லோகநாதன், பி. எஸ். செல்வா குழுவினரால்

"விரோதி"

என்னும் சமூக நாடகம் நடைபெறும்.

டிக்கட் வரியுள்பட :— 2—0—0 1—0—0 0—8—0

குறிப்பு:— வெளியூர்த் தோழர்கள் மதுரை பஸ்டாண்டில் 4-நெம்பர் டவுன்பஸ்ஸில் ஏறி, தெப்பக்குளம் மார்க்கமாக தியேட்டருக்கு வரவும்.

உரிமையாளர்:— ஆ. நேட்சிணமூர்த்தி மதுரை. (Ad)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram